# சேர் பொன் இராமநாதன்

## உருவச்சிலை திறப்புவிழாச்

# சிறப்பு மலர்



RAMANATHAN COLLEGE

யா/இராமநாதன் கல்லூ

சுன்னாகம்

1994.11.30

# சேர். பொன். இராமநாதன்

## உருவச்சிலை திறப்பு விழாச்

# சிறப்பு மலர்

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
இராமநாதன் கல்லூரி
சுன்னாகம்
**1994-11-30**

## Souvenir of the
## Ceremonial Opening of the
# Sir. Pon. Ramanathan Statue

School Development Society
**Ramanathan College**
**Chunnakam**
**1994-11-30**

*அட்டைப்பட வடிவமைப்பும் அச்சீடும் :*

திரு. ஆ. ஞானசேகரம்
ஞானம் சித்திர விளம்பர நிறுவனம், சங்கானை.

*புகைப்பட அமைப்பு :*

சித்திராலயா, யாழ்ப்பாணம்.

*அச்சுப் பதிப்பு :*

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

# யா / இராமநாதன் கல்லூரி

## அபிவிருத்திச் சங்க நிர்வாகசபை உறுப்பினர்கள்

## 1994/1995

1. திருமதி ஆ. சிவஞானசுந்தரம் (தலைவர்)
2. திருமதி சோ. கைலாசநாதன் (உபதலைவர்)
3. திரு. வ. இராசதுரை } (இணைச்செயலாளர்கள்)
4. திரு. அ நாகராசா }
5. திரு. கா. சாந்திநாதன் (பொருளாளர்)
6. திரு. செ. இலகுநாதன்
7. திரு. க. கணேசரத்தினம்
8. திரு. த. செல்வராசா
9. திரு. த. பஞ்சநாதன்
10. திரு. சி. தம்பித்துரை
11. திரு. க. சின்னராசா
12. திருமதி தி. தருமலிங்கம்
13. திருமதி ம. இராமசாமி
14. திருமதி கு. அப்புத்துரை
15. திருமதி ப. பத்மநாதன்
16. திருமதி ச. சிவநாதன்
17. திருமதி ஜீ. கணேசலிங்கம்
18. திருமதி வி. நரேந்திரா
19. செல்வி செ. செல்வராஜா
20. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி } நலன்விரும்பிகள்
21. திரு. அ. நல்லதம்பி }

### எண் பரிசோதகர்கள்

திரு. ந. சிவபாலகணேசன்

செல்வி கே. பரமநாதன்

திரு. ந. சுகுணன்

## சிலை அமைப்புக் குழுவினர்


1. திருமதி ஆ. சிவஞானசுந்தரம் (தலைவர்)
2. திருமதி சோ. கைலாசநாதன் (உபதலைவர்)
3. திரு. வ. இராசதுரை } (இணைச் செயலாளர்கள்)
4. திரு. அ. நாகராசா }
5. திரு. கா. சாந்திநாதன (பொருளாளர்)
6. திரு. அ. நல்லதம்பி
7. திரு. செ. இலகுநாதன்
8. திரு. க. கணேசரத்தினம்
9. திரு. வீ. சின்னத்தம்பி
10. திருமதி கு. அப்புத்துரை
11. திருமதி ப. பத்மநாதன்
12. திருமதி ஜீ. கணேசலிங்கம்
13. திருமதி உ. நடராசா
14. திருமதி கு. விஜயரகுநாதன்
15. செல்வி மே. நாகநாதன்

## கௌரவ ஆலோசகர்கள்

1. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
2. திரு. இரா. சுந்தரலிங்கம்
3. திரு. ஆறு. திருமுருகன்

## மலர்க்குழு

1. திருமதி ஆ. சிவஞானசுந்தரம் (அதிபர்)
2. திருமதி சோ. கைலாசநாதன் (பிரதிஅதிபர்)
3. திருமதி கு. அப்புத்துரை
4. திருமதி ப. பத்மநாதன்
5. திருமதி கு. விஜயரகுநாதன்
6. திருமதி ஜீ. கணேசலிங்கம்
7. திருமதி உ. நடராஜா
8. திரு. கா. சாந்திநாதன்



ஒப்புரவாளர்

சேர். பொன். இராமநாதன் அவர்கள்



சிலை வடித்த சிற்பி

திரு. வை. சிவசுப்பிரமணியம் அவர்கள்

( ரமணி )

கல்லூரி அதிபர்



திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம்

**B.A.(Hons) Cey. Dip. in Education**

**S.L.P.S. I**

# இராமநாதன் கல்லூரிக் கீதம்

இராகம் : **காம்போதி** தாளம் : **ஆதி**

மணிபரந்த மாகடலே மாலுருவ மாயிடினல்
அணிகிளரு மவனிதயத் தாமரைகா ணம்மானை
அணிகிளரு மவனிதயத் தாமரையிற் றிருவெழுந்து
பணிகொள்ளும் பொன்னிலங்கைப் பண்பிதுகா ணம்மானை
பண்பிதுநேர் பொன்னிலங்கைப் போற்றுதுங்கா ணம்மானை

பொன்னிலங்கைத் திருநுதலாயப் பொலிவது சீர் யாழ்ப்பாணம்
என்றுபல ரேத்துவது மியல்பேகா ணம்மானை
என்றுபல ரேத்துநுதற் கெழிற்திலக மாய்விளங்கும்
பொன்றாத பொன்ராம நாதனிட மம்மானை
பொன்ராம நாதன்றன் கல்லூரி யம்மானை.

இராகம் : **பூபாளம்** தாளம் : **ரூபகம்**

அரிபடர்ந்த மதர்க்கண்ணா ரரிய யனுங்காணாத
விரிமலர்ச்சே வடிகாணும் வியப்புடைத்திக் கல்லூரி

இராகம் : **பௌலி**

பண்மிழற்றும் பாவையர்கள் பரமனது பதம்பாடி
விண்களிக்கச் செயும்சீர்த்தி விரகுடைத்திக் கல்லூரி

இராகம் : **கல்யாணி**

திங்கள் சேர் வாண்முகத்தார் திருநீற்றுத் தேசுடனே
மங்களஞ் சேர் வாழ்வுபயில் மாண்புடைத்திக் கல்லூரி

இராகம் : **ஆனந்தபைரவி**

பொன்பூத்த மேனியர்கள் பூக்கொய்து பரமனுக்குப்
பண்மாலை யணிவிக்கும் பாங்குடைத்திக் கல்லூரி

இராகம் : **பெஹாக்**

தித்தித்த தேன்மொழியார் தீங்கரும்பிற் சுவைமிகுந்த
முத்தமிழின் பயன்றிளைக்கும் மகிழ்வுடைத்திக் கல்லூரி

இராகம் : **கேதார கௌள**

கிஞ்சுகவாய்க் கன்னியர்சங் கீதநயம் பலவிசைத்து
விஞ்சையர்போல் வீணைபயில் வியப்புடைத்திக் கல்லூரி

இராகம் : **சிந்துபைரவி**

*நித்திலத்தை யொத்தநகை நரணமடவார் நிரைநிரையாய்ச்*
*சித்திரத்தைப் போலியங்கும் சீருடைத்திக் கல்லூரி*

இராகம் : **காபி**

*வன்னமணிப் பூவாடை வனிதையர்கள் பன்மொழியிற்*
*சொன்னகலை பலபயிலுஞ் சதுருடைத்திக் கல்லூரி*

இராகம் : **தோடி**

*பால்போன்ற நிலவொளியிற் பந்தாடிப் பூவையர்கள்*
*நூல்நூற்று நலம்புரியும் நோன்புடைத்திக் கல்லூரி*

*ஈழத்தைக் காத்திவ் விருநிலத்தைத் தன்புகழாற்*
*சூழ்ராம நாதன்றன் கல்லூரி - வாழியவே*
*தாவி லூழித் தண்ணளி*
*மகாவலி கங்கை மணலினும் மிகவே*

**சு. நடேசபிள்ளை** B. A. B. L. ( Ex Senator )

### ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர்
### சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P.
அவர்களின்

# வாழ்த்துரை



''செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்க லாதார்''

என்பது வள்ளுவனின் வாய்மொழியாகும். இதற்கேற்ப கலைத்தொண்டும், தமிழ்த்தொண்டும், சைவத்தொண்டும், சமூகத்தொண்டும் ஒருசேர வளர்த்து இம்மண்ணுக்குப் பெருமை தேடித்தந்தவர் சேர். பொன். இராமநாத வள்ளல் அவர்கள். ஒருநூற்றாண்டு காலத்துக்குமுன்பு இம்மண்ணை அணிசெய்த குடும்பத்தில் வந்துதித்தவர் இவர். இப்பெரியாரின் தன்னலங்கருதாப்பணிகள் தமிழ்கூறும் நல்லுலகில் என்றென்றும் நினைவூட்டத்தக்கவை. அந்நினைவின் ஒரு சின்னமாகவே இன்று அவரின் உருவச்சிலை திறந்து வைக்கப்படுகிறது. தனது சொத்துக்கள் அனைத்தையும் பரமேஸ்வரன் சொத்து என்று கூறிக் கூறி ஆனந்தமடைந்தவர் இவர் என்பதை நாம் மறக்க முடியாது.

''வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாம் சிறுமைதப்பி
தாழ்வெனும் தன்மையோடு சைவமாஞ்சமயஞ்சாரும்
ஊழ் பெறலரிது''

என்னும் சித்தியார் பாடலுக்கேற்ப தனது வாழ்வைச் சிவவாழ்வாக அமைத்து வாழ்ந்த பெரியாருக்கு சிலை எடுத்துப் போற்றுகின்ற புண்ணியம் எமக்குக் கிடைத்ததே என்று நினைக்கும்போது உவகை பொங்குகின்றது. இது எமது நன்றிக்கடனுமாகும். இப்பெரியாரின் பெருமைகளை எடுத்துப்பாடி பிரம்மஸ்ரீ நவநீதகிருஷ்ண பாரதியார் பின்வருமாறு வாழ்த்துகிறார்

''படிக்காத நூலில்லை பேசாத அவையில்லை பகருஞ்சொல்தேன்
மடுக்காத காதில்லை புகழாத நாளில்லை மலர்ந்து நெஞ்சங்
கொடுக்காத கொடையில்லை கும்பிடாத்தேவுமில்லை கூர்ந்து பார்த்தும்
வடுக்காண வொண்ணாத திருராமநாதனவன் வாழி மாதோ''

இராமநாத வள்ளல் அமைத்துத் தந்த மகளிர் கல்லூரியில் இன்று நாம் பெருமையுடன் கடமை புரிந்து கொண்டிருக்கிறோம். கும்பிடு வதற்கு நல்ல நடராசப் பெருமானின் திருக்கோயில்; தொண்டு செய்வதற்கு நல்ல விசாலமான பூஞ்சோலை; பருகுவதற்கு இனிய நன்னீரூற்று; தங்கியிருந்துதென்றல் நுகருவதற்கு நிழல் தருமரங்கள்; கல்வி கற்பதற்கு தாராளமான மண்டபங்கள்; நுண்கலை பயில் வதற்கு அழகான அமைப்பான மேடைகளும் சாலைகளும்; அனைத்துமே இப்பெரியவரின் தூயசிந்தனையின் ஊற்றாக இன்று எம்முன் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இவற்றையெல்லாம் அனுபவித்து ஆனந்தமடைகின்ற நாம் அவர்தம் சிலைநிறுவப்பட்ட புனித இடத்தையும் மகிமையாக்குவோம் என்று உறுதி பூணுவோம்.

**''கருதரிய சிற்சபையில் ஆனந்த நர்த்தமிடும் கருணாகரக் கடவுளே<br>திரிகரண சுத்தியும் காரியசித்தியும் அருள்வாய்''**

என்ற அருள்வாக்கை நாமும் பலமுறைகூறி வாழ்த்தி நிற்போமாக.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்
### பேராசிரியர் க. குணரத்தினம் அவர்கள்

வழங்கிய

# ஆசியுரை



எண்பது ஆண்டுகளாக நிறைவுடைய வாழ்வு வாழ்ந்து 1930இல் மறைந்த சேர். பொன். இராமநாதன் அவர்கள் இந்நாட்டுத் தேசியத் தலைவர்களில் முன்னணியில் நிற்கும் பெருந்தகையாவர். அரசியல் தொட்டு ஆத்மஞானம் வரை இவரது ஆழ்ந்த புலமையும் அகன்ற பார்வையும் சென்றமை இவருக்குரிய தனிச்சிறப்பாகும். இத்தகைய சிறப்புடைய அரசியற் தலைவர்கள் இற்றைவரை நம் நாட்டிற் தோற்றவில்லை என்று கூறினால் மிகையாகாது.

நமது சமுதாயத்தைப் பொறுத்தமட்டில் சேர். பொன். இராமநாதன் ஆற்றிய பணிகள் ஒப்பிலாதவை. இவர் நமது கலாசார மறுமலர்ச்சியின் தந்தையாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களால் சட்ட சபையில் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் தகமை படைத்தவர் என்று சிபார்சு செய்யப்பட்டவர் ஆவர். எனினும், தமிழ் மக்களின் எதிர்காலம் சுதந்திர இலங்கையில் இருள்மயமாயிருக்கும் எனத் தீர்க்க தரிசனத்துடன் அன்று இவர் கூறத் தயங்கவில்லை. அத்துடன் நாவலரின் பணிகளை விசாலமாக்கிய பெருமையும் இவருக்குண்டு. சுவாமி விவேகானந்தருக்குப் பின்னர் நமது சமயச் சிறப்புக்களை மிகச் சிறப்பான பாணியில் மேற்கு நாடுகளுக்கு அறிமுகப்படுத்திய பெருமையும் சேர். பொன். இராமநாதனுக்கே உரியது.


இவர் அமைத்த கல்வி நிறுவனங்களான பரமேஸ்வராக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி ஆகியவை இவரின் வள்ளற் தன்மைக்குத் தலைசிறந்த எச்சங்களாகும். இவற்றில் முன்னையது பல்கலைக்கழகமாகி விருட்சமாக வளரும் என்று அன்றே சிந்தித்துச் செயற்பட்டவர் சேர். பொன். இராமநாதன். அன்னார் மறைந்து ஆறு தசாப்தங்களுக்குப் பின்னராவது அவரைச் சிலை உருவில் அவரின் பெயரைத் தாங்கி நிற்கும் கல்லூரியில் கௌரவிப்பது போற்றத்தக்கது. இதையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்

## திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்கள்

வழங்கிய

# ஆசியுரை



வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க வாழ்ந்த வள்ளல்களில் தலைமகனாக விளங்கியவர் சேர். பொன். இராமநாதன் அவர்கள். நல்லதோர் வீணையாக வையகம் பயனுறவாழ விமலனிடம் வல்லமை வேண்டிநின்ற பெருமகனும் அவரேயாம்.

''தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு''

என்ற பாரதிதாசனின் எழுச்சிபெற்ற வாசகத்திற்கு இலக்காக மதிநுட்பமும் பரோபகாரமும் பாங்காய் அமையப் பரமன் கழலடி வேண்டிநின்ற தனிப்பெரும் வள்ளல் இராமநாதன் அவர்கள்.

''என்கடன் பணிசெய்து கிடப்பது'' என்பதற்கமைய அவரது பணி அரசியல், கல்வி, சமயம், பொருளாதாரம், கலை, கலாச்சாரம் ஆகிய சகலதுறைகளையும் தழுவிநின்றது. சேர். பொன். இராமநாதன் அவர்கள் ஓர் அரசியல்வாதி, தத்துவஞானி, சமயக்காவலர், தேசியவாதி, பிறர்நலன்பேணும் பெருந்தகையாளர், பேச்சாளர், தருமசீலர், அறிஞர் என்று எவ்வாறு கூறினும் அவருடைய தனிச் சிறப்பான ஆளுமையை முழுமையாகக் கூறிவிடமுடியாது.

இந்துவின் நித்திலமென விளங்கும் ஈழமண்ணில் வாழும் மக்களெல்லாம் சால்புடைப் பெரியோரான இராமநாதன் அவர்களை உள்ளத்திருத்தி நேசித்தனர். உள்ளமே சைவத்திருமகன் வாழும் இல்லமாக இராமநாத வள்ளலைப் போற்றிப் பூசித்தனர். தென்னிலங்கையில் நன்றிக்கும் பாராட்டுதலுக்கும் இலச்சினையாக முதற்பாராளுமன்ற முன்றலிலே கெம்பீரமாக எழுந்து நிற்கின்றது அன்னாரது முதற்சிலை. தமிழன் வாழவேண்டும் மேன்மைகொள் சைவநீதியைப் புரிந்து புன்

னெறியதனிற் செல்லாப் பாங்கினராக மிளிரவேண்டும், இன்பத்தமிழ் மணங்கமழ கேடில் விழுச்செல்வம் கல்வியைப் பெறவேண்டும் எனச் சிந்தையார நேசித்த சீரனின் சிந்தனைக்குச் செயலுருக் கொடுத்த சான்றோன் வள்ளல் காணவிழைந்த செந்தமிழ் மண்ணில் விலை போகாச் சிலையாக இற்றைவரை காணத பெருங்குறை இன்று தீருகின்றது என்பது மன ஆறுதலைத் தருகிறது. நல்லவர்களாக, முயற்சித் திருவுடைச் செம்மல்களாக நாம் வாழவேண்டும். சிந்தனையைச் செயல் வடிவிற் காணவேண்டும். செய்நன்றியுடைச் செந்தமிழர் கூட்டமதாய் மிளிரவேண்டும்.

கொடுத்தாலும் நிறைவன்றிக் குறைவுறாத கல்விச் செல்வத்தை அள்ளித் தந்த சேர். பொன். இராமநாதனார் என்றும் எம்மிடை வாழவேண்டும். அவரது கெம்பீரமும் சிந்தனா விலாசமும் தூரப்பார்வையும் எங்கள் விழிகளுக்கு விருந்தாக வேண்டும். உள்ளத்து உள்ளும் அவாவைப் பூர்த்திசெய்ய ''அன்னமூட்டிய தெய்வமணிக்கரம் ஆணைகாட்டில் அனலையும் விழுங்குவோம்'' என பெண்ணுக்கு மகுடம் வைத்த பாரதியை, ''பெண்ணிற் பெருந்தக்கயாவுள'' என்ற வான்புகழ் வள்ளுவனை, ''கட்புலனாயதோர் அமைதியின் தன்மை'' என்ற அடியார்க்கு நல்லாரை நன்கு புரிந்துகொண்டு எம்மத்தியில் வாழும் பெண்மை சிறக்கவேண்டுமென விரிந்து பரந்த இராமநாதன் கல்லூரியை,

> **''பொன்பூத்த மேனியர்கள் பூக்கொய்து பரமனுக்குப்**
> **பண்மாலை யணிவிக்கும் பாங்குடைத்திக் கல்லூரியை''**

எமக்குத் தந்தவர் இராமநாதன். அந்த வளாகத்திலே நித்திலமாய் நின்று நிலவும் நிமலனொத்த இராமநாதனார் வீரத்திருவுரு நிலவவேண்டும். அந்த எண்ணக்கரு ஆல்போல் தழைத்த நாட்கண்டு களிப்படைகிறேன். இவ்வீரத்திருவுரு நன்றித் திருவுருவாய் என்றும் கெம்பீரமாகக் கவினுறு சிலையாய் எம்மிடையே உயர்ந்து விளங்குக!

யாழ்ப்பாணம் - வலயம் 02
கல்விப் பணிப்பாளர்
**திரு. க. கந்தசாமி அவர்கள்**
வழங்கிய

# ஆசியுரை



19ஆம் நூற்றாண்டு பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இலங்கையில் சகல இனத்தவராலும் மதிக்கப்பட்டு பாராட்டுப் பெற்ற பெரியார் சேர். பொன்னம்பலம் இராமநாதன். இப்பெரியாரின்சிலை வைக்கப் பெருமுயற்சி எடுத்த அபிவிருத்திச் சங்கத்தினரின் விடா முயற்சி பாராட்டுக்குரியது. இப் பெரியாரைப் போற்றுவது அவரின் பாரிய தொண்டைப் பரவச் செய்வதாகும்.

இலங்கையின் சுதேசிய கல்வியில் அக்கறையும் அதன் வளர்ச்சிக்கு அரிய பெரிய தொண்டும் ஆற்றியவர் சேர். பொன். இராமநாதன். சட்டசபையில் '' இலங்கையில் உள்ள செல்வந்தர்கள் தங்கள் சுகபோகங்களிலே மூழ்கியிருக்கிறார்கள். வறிய மக்களின் கல்வி பற்றிய தேவையை உணராது உள்ளார்கள். எதிர் காலத்தில் அரசு வறிய மக்களின் கல்விக்காகப் பெருமளவு பங்கைச் செலவு செய்ய வேண்டும் '' என வாதிட்டார்.


சைவசமயப் பாரம்பரியத்துடன் ஆங்கிலக் கல்வியை தமிழர் பெற பல வழிகளை உருவாக்கியவர் இவர். இராமநாதன் மகளிர் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி இவர் நாமத்தை இன்றும் மங்காது இருக்கச் செய்கின்றன. தமிழர் பாரம்பரியத்தைப் பேணி பல கலைகளையும் நம் பெண் பிள்ளைகள் கற்க இராமநாதன் கல்லூரி ஆற்றும் பணி அளப்பரியது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் கருத்துரைகளையும் வழிமுறைகளையும் முன்னெடுக்க பரப்புரை செய்த இராமநாதன் அவர்கள் ஆங்கிலேயர் மத்தியில் பெரும் பட்டத்தையும் ஏற்படுத்தினார். இவர் இறந்த வேளை ''ஒரு சிறந்த சட்டவல்லுனர், நியாயவாதி, பேச்சாளன், கல்விமான், அறிஞன், எல்லாவற்றிலும் மேலாக ஒரு சீமான்'' என அப்போதைய கவனர் சேர். கேபேட் ஸ்ரான்லி அவர்களால் பாராட்டப்பட்டவர். இத்தகைய சான்றோனை நினைவு கூரும் முகமாக அவரது உருவச் சிலையைக் கல்லூரி முன்றலில் நிறுவும் பணியில் ஈடுபட்ட அனைவரையும் பாராட்டுகிறோம்.

அவரின் இலட்சியத்தை அடையக் கூடியதாக இராமநாதன் கல்லூரியின் பணி வளர வாழ்த்துகிறோம்.

உடுவில் கல்விக் கோட்டம்
பிரதிக்கல்விப்பணிப்பாளர்
திரு. சு. இரத்தினராசா அவர்கள்
வழங்கிய

# ஆசியுரை



மனிதர்கள் பிறக்கின்றார்கள். இறக்கின்றார்கள். ஆனால் எல்லோரும் பின்வந்த சமுதாயத்தின் இதயங்களில் நிற்பதுமில்லை. நிலைப்பதுமில்லை. ஒரு சிலர்தான் பின்சந்ததியினரால் போற்றப்படுகின்றார்கள். அந்த வரிசையில் சேர். பொன். இராமநாதன் அவர்களும் இலங்கை மக்கள் எல்லோராலும் போற்றப்படுகின்றார். அன்னார் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பிறந்தாலும் அவரது தன்னிகரில்லாச் சமூக சேவையினாலும் கல்வித்திறமையினாலும் எல்லோராலும் போற்றப்படுகின்றார். அன்னாருக்கு இராமநாதன் மகளிர் கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தினர் அவர் இறந்து அறுபது ஆண்டுகள் சென்றதன் பின்பு என்றாலும் அவருக்குச் சிலை எடுக்க முனைந்தது போற்றத்தக்கதாகும். அவரது சிலையை அவரது பெயரைத் தாங்கிநிற்கும் பாடசாலையின் முன்றலில் அமைக்க எண்ணியது ஒரு சிறப்பான சிந்தனையாகும். ஆனால் அன்னாரின் சேவையை சிங்கள மக்களும் ஆட்சியாளர்களும் எப்போதோ உணர்ந்து பாராளுமன்றத்தின் முன்றலில் காலிமுகத்திடலில் அவரது சிலையைச் சிறப்பாகச் செதுக்கி உள்ளனர். சேர். பொன். இராமநாதனின் சேவையையும் புகழையும் அறியாதார் இலங்கையில் இருக்க முடியாது. அன்னார் தேடிய செல்வங்களனைத்தும் எல்லாம் இன்று சமூக வளர்ச்சிக்காக செயலாற்றுகின்றதை உணர முடிகின்றது.

அவரது பெயரில் பல்கலைக்கழக விடுதியும் பாடசாலையும் இயங்குவது அவரது சிறப்பை இன்றும் தாங்கிநிற்கின்றது. எனவே அவரை நினைவு கூர சிலை அமைத்துப் பாராட்டுவது சாலச் சிறந்தது. என்றும் இராமநாதன் புகழ் ஓங்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி ஆசிர்வதிக்கின்றேன்.

வலிகாமம் தெற்கு

உடுவில் பிரதேச செயலர் / மேலதிக அரசாங்க அதிபர்

**திரு. ஆ. மகாலிங்கம் அவர்கள்**

வழங்கிய

# ஆசியுரை



சேர். பொன். இராமநாதன் அவர்களின் பணிகளை நினைவு கூர்ந்து அன்னாரின் நினைவுச் சிலை ஒன்று சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தினரால் நிறுவப் படவிருப்பது பற்றி அறிந்து மகிழ்ச்சி அடைந் தேன். சேர். பொன். இராமநாதன் அவர்கள் அரை நூற்றாண்டுக்கும் மேலாக இலங்கையில் அரசியல், சமூக, சமய கலாச்சாரத் துறை களில் செல்வாக்குச செலுத்திய ஒரு வீர புரு ஷராவார். ஆளுமையும், திறமையும், நேர்மை யும், பணிவும், மனிதாபிமானமும் நிரம்பிய அன் னார் இந்நாட்டின் எல்லாச் சமூக மக்களாலும் நேசிக்கப்பட்டார். அவரது காலம் நாடு பல நெருக்கடிகளை எதிர் நோக்கியது. அந்நிய ஆட்சியாளர்கள் தமது அதிகாரத்தைச் செலுத்த முற்பட்டதோடு மக்களின் சுதந்திரத்தை நசுக்கவும் முற்பட்டனர். மக்களின் சுதந்திரத்தையும் தேசிய மொழி, கலை, கலாச்சாரம், சமயம் ஆகியவற்றின் பெருமையையும் வலியுறுத்தி சேர். பொன். இராமநாதன் அவர்கள் பல போராட்டங்களை நடாத்தி வெற்றி கண்டார். கிரீக், லத்தீன், உற்புறு, ஆங்கிலம், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்த அன்னார் தன் தாய்மொழியாம் தமிழை மிகவும் நேசித்தார். தமிழில் பல இலக்கிய இலக்கண நூல்களை எழுதியதுடன் பகவத் கீதையைத் தமிழில் மொழி பெயர்த்தார். தமிழ் மக்கள் தமது பண்பாடு, உடை நடை, பழக்க வழக்கங்களை ஒருபோதும் கைவிடலாகாது என வற்புறுத்தியதுடன் தாமும் அவ்வாறே வாழ்ந்து காட்டினார். சைவசித்தாந்தத்தை நன்கு பயின்ற அவர் சமய ஆசாரங்களைப் போற்றி வாழ்ந்தார். சைவசமயத் திற்கு நாவலர் அவர்களுடன் சேர்ந்தும் அவர் இறந்த பின்னர் தனித்தும்

அவர் ஆற்றிய பணிகள் அளவிட முடியாதவை. தமிழ்ப் பிள்ளைகள் தமது சமயச் சூழலில் தாய் மொழியில் கல்வி கற்க வேண்டுமென்பதால் திருநெல்வேலியில் ஆண்களுக்குப் பரமேஸ்வராக் கல்லூரியையும் பெண் பிள்ளைகளுக்காக சுன்னாகம் இராமநாதன் கல்லூரியையும் நிறுவிய தோடு ஏராளமான சொத்துக்களை இப்பாடசாலைகளுக்கு அர்ப்பணித் தார். பரமேஸ்வரன் ஆலயம் இவரது சமயப்பணிக்குச் சான்றாகும். மிஷனரிமார்கள் கல்வியுடன் தமது சமயத்தையும் திணிக்க முயன்றதால் 1923இல் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை அமைத்து அதன் முதற் தலைவராகவும், முகாமையாளராகவும் இருந்து யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் சைவத்தமிழ்ப் பாடசாலைகளை நிறுவினார். இத்தகை அரிய பணிகளை ஆற்றிய வீரபுருஷருக்கு நினைவுச் சிலை அமைப்பது சாலவும் பொருந்தும்

### இராமநாதன் கல்லூரி முன்னாள் அதிபர்
### இராமநாதன் நுண்கலைக்கல்லூரி முன்னாள் அதிபர்
### திருமதி இ. அருணாசலம் அவர்களின்

# ஆசிச்செய்தி



ஈழத்தின் இணையற்ற தலைவனாக இந்துக்களின் தவப்பயனாகத் தோன்றி தமிழர்களின் தலைமகனாக வாழ்ந்து மறைந்தும் மறையாத பெரியார் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள். கல்லூரி அபிவிருத்திச் சங்கம் கல்லூரி வளாக முன்றலில் அவரதுஉருவச் சிலையை நிறுவுவதோடு விசேடமலர்ஒன்றையும் வெளியிடத் தீர்மானித்துச் செயலாற்றுவது மிகவும் பாராட்டுக்குரியது. இராமநாதன் அவர்கள் 1913இல் இந்து மகளிர்க்கென ஒரு கல்லூரியை மருதனார்மடத்திலும் 1921இல் ஆண்களுக்கென பரமேஸ்வராக் கல்லூரியை திருநெல்வேலியிலும் அமைத்தார். பரமேஸ்வராக்கல்லூரி ஸ்தாபகரின் இலட்சியத்திற்கமைய இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது.

பெண் சமூகத்தின் அச்சாணி பெண்ணின் ஒழுக்கம், கட்டுப்பாடு, அன்பு, இல்வாழ்க்கை இவற்றைக் கொண்டே ஒரு இனத்தின் பெருமை கணிக்கப்படுகிறது. தமிழ்மாணவிகள் தங்கள் சமயம் பண்பாடு என்பவற்றின் அடிப்படையிலே வாழ்க்கை நடத்துவதற்குரிய வழியை வகுப்பதற்கே பெரியார் அவர்கள் இராமநாதன் மகளிர் கல்லூரியை நிறுவினார். இக்கல்லூரி பெரியார் அவர்களின் இலட்சியங்களுக்கேற்ப அவரது துணைவியார் சீமாட்டி லீலாவதி இராமநாதன் அம்மையார், கலாநிதி சு. நடேசபிள்ளை, திருமதி சிவகாமசுந்தரி நடேசபிள்ளை போன்ற கல்லூரி அதிபர்கள் ஆசிரியர்களின் தன்னலமற்ற சிறந்த தொண்டினால் இன்று ஈழத்தின் சிறந்த மகளிர் கல்லூரியாக மிளிர்கிறது.

பெரியார் சேர். பொன். இராமநாதன் கல்விமான், இலக்கியவிற்பன்னர். தத்துவசாஸ்திரி, சட்ட அறிஞர், சிந்தனையாளர், இராசதந்திரி, தீர்க்கதரிசி, தேசியவீரர் என்றெல்லாம் அறிஞர்களால் போற்றப்படுபவர். இவர் நிறுவிய இராமநாதன் கல்லூரியில் முப்பத்தாறு (36) வருடங்கள் ஆசிரியராய், உபஅதிபராய், அதிபராய் அரும்பணி ஆற்றக்கிடைத்தது எனது வாழ்க்கையின் அரும்பேறு எனக் கருதுகின்றேன். இராமநாதன் கல்லூரி மேன் மேலும் வளர்ச்சியடைய இக்கல்லூரியில்கோயில்கொண்ட நடராஜப்பெருமான் அருள் புரிவாராக.

# அதிபர் உள்ளத்திலிருந்து .........

## திருமதி ஆ. சிவஞானசுந்தரம் அவர்கள்

B. A. Hons (Cey.) Dip-in-Edu.

ஈழவள நாட்டின் அருந்தவப் புதல்வராகத் தோன்றி உலகப் புகழ் பெற்றவர் சேர். பொன்னம்பலம் இராமநாதனவர்கள். புகழ்பூத்த மரபிலே அவதரித்து மக்களது இதயங்களில் சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரையாக நிலைத்து நின்று அவர்களது இதயம் நைந்துருக அமரத்துவம் அடைந்தவர் இப்பெருமகனார்.

சைவத்தையும், சைவ நெறிமுறைகளையும் கருமேகங்கள் சூழ்ந் திருந்த வேளையில் ஞானபானுவாகத் தோன்றிக் கருமேகங்களை மேலோங்க விடாமல் தடுத்த பெருவீரம் படைத்தவர் இவ்வண்ணல்.

ஈழத் தமிழ் மக்களின் தனிப்பெருந் தலைவனாகத் திகழ்ந்த இவர், சைவசமயக் காவலனாக, ஆன்மீக நெறியின் அருளொளி யாக, அரசியற் சாணக்கியம் நிறைந்தவராக, தமர் பிறர் எனக் கருதாது மக்களுக்குச் சமநீதி வழங்கும் சமூக ஜோதியாக மக்கள் இதயங்களில் இடம் பெற்றுள்ளார்.


இராமநாதப் பெருவள்ளல் நிறுவிய இராமநாதன் மகளிர் கல் லூரியும், பரமேஸ்வராக் கல்லூரியும் அன்னாரது மனவளத்தைப் புலப்படுத்துவதோடு தமிழ் மாணவர்களது கல்வியின் முன்னேற்றத் தில் அவருக்கிருந்த பேராசையையும் எடுத்துக் காட்டுகிறது. இன்று இராமநாதன் நுண்கலைக் கல்லூரியும், பரமேஸ்வராக் கல்லூரி யும் பல்கலைக் கழகங்களாகக் கல்வி ஒளியூட்டுகின்றன. இவ்விரு கல்வி நிறுவனங்களும் அமரத்துவம் அடைந்த அருந்தவப் புதல் வருக்கு, அழியா நினைவுச் சின்னங்களாக அமையுமெனினும், இப் பெருந்தகையாளரது திருவுருவை மக்கள் மறவாதிருக்க வேண்டு மென்பதற்காக அவர் நிறுவிய இராமநாதன் கல்லூரியில் அறுபது ஆண்டுகளின் பின் அன்னாரது முழு உருவச் சிலையை நாட்டி அஞ்சலி செய்கிறோம். இது கல்லூரி வரலாற்றில் பெருமை தரும் நிகழ்வாக அமையும் என நம்புகின்றேன்.

நான் இக் கல்லூரி அதிபராகப் பதவியேற்ற நாளிலிருந்து கல்லூரி நிறுவுநரும், புகழ் பூத்த தலைவருமான இராமநாத வள்ள லுக்கு சிலை அமைக்க வேண்டுமென்ற எண்ணம் என்னுள்ளத்தில்

முகிழ்ந்தது. காலச் சூழ்நிலையால் எனது எண்ணம் செயல்வடிவம் பெற சிறிதுகாலம் எடுத்தது. ஆனால் எனது இந்த விருப்பத்தை வெளியிட்டவுடனேயே மனப்பூர்வமாக அதனை வரவேற்ற கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தினரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. சிலை எடுக்க வேண்டுமெனத் தீர்மானித்தவுடன் முழுமூச்சுடன் அவர்கள் செயற்பட ஆரம்பித்தார்கள். கஷ்டமான சூழலின் மத்தியில் இதய சுத்தியுடனும், பரோபகார சிந்தையுடனும் இரவு பகல் என்று பாராது அபிவிருத்திச் சங்கத்தினர் ஆற்றிய பணி மகத்தானது. வருங்காலச் சந்ததியினர் இப் பெரும் பணியைப் போற்றி மகிழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

பெருவள்ளல் சேர். பொன். இராமநாதனது உருவச்சிலையை நிர்மாணிப்பதில் ஒத்துழைப்பு நல்கிய பெருமக்களின் பங்கு போற்றத் தக்கது. உலகப் புகழ்பெற்ற சேர். பொன். இராமநாதனவர்களுக்கு அவரது கல்லூரியின் புனித மண்ணில் சிலை எடுப்பதற்குத் தோன்றாத் துணையாய் நின்று வழி நடாத்தி அருள்பாலித்த நடேசப் பெருமானை மனமொழி மெய்யால் வாழ்த்தி வணங்குகிறேன்.

# இணைச் செயலாளர்கள் இதயங்களிலிருந்து.........



திரு. வ. இராசதுரை
அவர்கள்
(ஓய்வுபெற்ற தொழில்
நுட்பவியலாளர்)



திரு. அ. நாகராஜா
அவர்கள்
(மின் அத்தியட்சகர்)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து உவமையிலா உயர்பணிகள் பல செய்து, பெருமையுடன் பொலிந்து, மறைந்த உலகப் பெரியோர் வரிசையில் இராமநாதவள்ளல் சிறப்பிடம் பெறுகிறார். தாம் பிறந்த நாட்டுக்காகத், தாம் தோன்றிய சமூகத்துக்கா, தாம் சார்ந்த சமயத்துக்காக அவராற்றிய பணிகள் எம் நாட்டார் அனைவராலும் நன்றியுடன் நினைவு கூரத்தக்கனவாகும். நம் நாட்டின் தேசியத் தலைவர்களிற் சிறந்தவராகப் போற்றப்படும் இப் பெரியாரின் சீரியபணிகளுக்கெல்லாம் பெருமளவு கைகொடுத்தது அவர் தம் குடும்பப் பின்னணியாகும். அவர் தம் குடும்பத்தை விளங்க வைக்கும் அகல் விளக்காகித் தாமும் ஒளிர்ந்து தம் குடும்பத்தின் பெருமையையும் ஒளி வீசச் செய்தார்.

சேர். பொன். இராமநாதன் வாழ்ந்த காலகட்டம் இன்றுள்ளது போற் பெரும் நெருக்கடியானதாக அமைந்திருந்தது. மேல் நாட்டார் வருகை, அவர்கள் இங்கு மேற்கொண்ட மதமாற்றம், புகுத்திய கல்வி முறை என்பன எம் மொழி சமய கலாச்சார பாரம்பரியங்களையே புரட்டித்தள்ளும் அளவுக்கு வலுப்பெற்றிருந்த அக் காலத்தில் தனி ஒருவராக நின்று எம் மொழி, எம் சமயப்பண்புகள் அழிந்து விடாது வீழ்ச்சியடையாது தோள் கொடுத்தவர், தாங்கிப்பிடித்தவர் இராமநாத வள்ளலே என்று கூறினால் அது மிகையாகாது. தமிழையும், சைவத்தையும் தன்னிரு கண்களெனப் போற்றிய நல்லை நாவலர் வழிநின்று தமிழை வளர்க்கவும், சைவத்தை ஓங்கச் செய்யவும் இவராற்றிய பணிகள் ஏராளம் ஏராளம்.

கல்விப்பணி மூலமே ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பலாம் என்பதைக் கருத்திற் கொண்டு தமிழ் மொழிப் பற்றுள்ளவர்களாவும், சைவசமய சீலர்களாகவும். இளஞ் சமுதாயத்தினர் வளரவேண்டும், பயிற்சி பெற வேண்டும் என்ற ஆவலினாலே தம் சொந்தப் பொருளை முதலீடு செய்து ஆண்கள் கல்விகற்க பரமேஸ்வராக் கல்லூரியையும், பெண்கள் கல்வி கற்க இராமநாதன் கல்லூரியையும் அமைத்தார். வீட்டின் விளக்குகளாக விளங்கப்போகும் பெண்களை விளங்க வைப்பதற்காகப் பெண்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, பெண்கள் கல்வியின் அவசியத்தை அறிந்து அவர் நிறுவிய இக்கல்லூரி இலங்கையில் இந்து மகளிருக்கு எனத்தோன்றிய முதற் கல்லூரி என்ற பெருமையைப் பெறுகின்றது இன்றும் நல் நோக்கங்களை நிறைவு செய்யும் நற் கல்லூரியாக மிளிர்கின்றது.

தமகருவமையில்லாத இப் பெரியாரின் பணிகளை நன்றியுடன் நினைவு கூரும் வகையில் அன்னாரின் உருவச்சிலை கொழும்பு மாநகரிலுள்ள காலிமுகத்திடலில் அமைந்த பாராளுமன்ற முன்றிலை அணி செய்யும் வகையில் ஆண்டுகள் பலவாகத் தலைநிமிர்ந்து நிற்கின்றது ஆயின், தம் உடல், பொருள், ஆவி முதலியவற்றின் பெரும்பங்கை அர்ப்பணித்த அவர் அவதரித்த யாழ்ப்பாண மண்ணில் அன்னாருக்கு ஒரு சிலை இல்லாமை ஒரு பெரும் குறையாக எம் மனத்தை உறுத்தத் தொடங்கியது. அத்தகைய பெரியாருக்கு ஒரு சிலை அவர் பெயரைத் தாங்கி மிளிரும் இக்கல்லூரியில் அமைப்பதே பொருத்தமாயிருக்கும் என்ற எண்ணக்கருவும் எம் மனதுள் முளைவிடத் தொடங்கியது. இதைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தவராகிய நாம் பொறுப்பேற்றுச் செய்வதே தக்கதென எண்ணி நாம் கல்லூரி அபிவிருத்திக்கென வகுத்த இவ்வாண்டுத் திட்டங்களில் அதற்கு முன்னுரிமை அளித்து முனைப்புடன் செயற்பட்டோம். அனைவரும் எம் பணியை ஆவலுடன் வரவேற்றனர். ஆதரவு தர முன்வந்தனர். அதன் வெளிப்பாடாகவே கல்லூரி முன்றிலிற் கம்பீரமாகக் காட்சியளிக்கும் இச் சிலை உருவாக்கப்பட்டது. இப் பணி எம் காலத்தில் எங்களது முயற்சியால் நிறை வெய்தியமையை எண்ணிப் பூரிப்படைகின்றோம். புளகாங்கிதம் கொள்கின்றோம். இச்சிலையில் உறைந்துள்ள உத்தமரின் உருவம் பார்ப்போர் மனதைக்கவரும் அதேவேளை அன்னாரின் உத்தமபணிகளையும் நன்றியுடன் நினைவு கூரவைக்கும் என்பதில் ஐயமில்லை. நாமும் இப்பெரியார் வழிநின்று எம்மாலான பணிகளை எம் நாட்டுக்கும், எம் சமூகத்துக்கும் ஆற்ற முனைவோமாக.

வாழ்க இராமநாதன் புகழ்—வளர்க இராமநாதன் கல்லூரி.

நன்றி

சேர். பொன். இராமநாதனின் சிலை

**அமைப்புக் குழு — 1994**



இடமிருந்து வலம் :

இருப்பவர்கள் : திரு. கா. சாந்திநாதன் (பொருளாளர்), திரு. அ. நாகராஜா (இணைச் செயலாளர்), திரு. ஆறு. திருமுருகன் (கௌரவ ஆலோசகர்), திரு. இரா. சுந்தரலிங்கம் (கௌரவ ஆலோசகர்), திருமதி ஆ. சிவஞானசுந்தரம் (அதிபர்), சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (கௌரவ ஆலோசகர்), திருமதி சோ. கைலாசநாதன் (பிரதி அதிபர்), திரு. அ. நல்லதம்பி

# மலர்க் குழு அறிக்கை

பிறமதத்தவர் வருயையால் வளர்ச்சி குன்றிய சைவம், தமிழ், கலை, கலாசாரம், பண்பாடு என்பன தழைத்தோங்க, சேர். பொன். இராமநாதன் அவர்களின் தளராத ஊக்கத்தால் 1913ஆம் ஆண்டு இராமநாதன் கல்லூரி நிறுவப்பட்டது.

அவர்களின் பின் அவரது துணைவியார் சீமாட்டி லீலாவதி அம்மையாரும், மகள் திருமதி சிவகாமசுந்தரி நடேசபிள்ளை, திரு. சுப்பையா நடேசபிள்ளை ஆகியோரின் முகாமையிற் கூட எமது கல்லூரி தனக்கெனத் தனியிடம் பெற்று விளங்கியது. 1962ஆம் ஆண்டு அரசு பொறுப்பேற்றது. கல்விப்பணிமனை உத்தியோகத்தரின் ஊக்குவிப்பாலும், தகைசான்ற கல்லூரித் தலைவர்களின் தன்னல மற்ற சேவையாலும், அறிவுநிறை ஆசிரியர்களின் அயரா உழைப்பாலும் எமது கல்லூரி பல துறைகளிலும் வளர்ச்சி பெற்றுப் பீடுடன் விளங்குகின்றது. அன்று முதல் இன்று எண்பத்தோராவது அகவையை எட்டிப்பிடித்த காலம் வரை எமது தாபகரின் கொள்கைகள் பின் பற்றப்பட்டு வருகின்றன.

அன்று தமிழினத்துக்கு மட்டு மன்றி இலங்கை வாழ் மக்களுக்கே அருந்தொண்டாற்றிய செம்மலான சேர். பொன். இராமநாதன் அவர்களது உயர் சேவையை உணர்ந்த அரசாங்கம் பாராளுமன்ற முன்றலில் அவருக்கு உருவச்சிலை எழுப்பிப் புகழாரஞ் சூட்டியது. இத்தனை பெருமைக்குரிய எமது நிறுவுநருக்கு அவரது பிறந்த பொன்னாட்டில், அவரது கல்லூரி வளாகத்தில் தமிழினமாகிய நாமும் ஏன் சிலை எழுப்பக் கூடாது. இந்த வினா எமது கல்லூரிச் சமுகத்தவர் மத்தியில் எழுந்ததில் வியப்பேதுமில்லை. எனவே தான் இன்று அன்னாரின் வளாகத்தில் கல்லூரி முன்றலில் சிலை எழுப்பி, சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படுகின்றது. பலநெருக்கடிகள் மத்தியில் இம்மலர் மலர்கிறது.

எமது கல்லூரியிற் கொண்ட பற்றின் காரணமாக பெரியோர் பலர் இதயபூர்வமாகத் தந்துதவிய ஆசிச் செய்திகள், பேரறிஞர்களின் அறிவுப் பெட்டகத்திலிருந்து அள்ளித் தந்த கட்டுரை ஆக்கங்கள் இச் சிறப்பு மலரின் இங்கித இதழ்களாகப் பரிமளிக்கின்றன. இவ்விதழ்களினூடாகப் பெறுகின்ற இராமநாத வள்ளலின் புகழ்மணத்தை நுகர்ந்து இன்புறுவோம். கருதரிய சிற்சபையில் ஆனந்த நிருத்தமிடும் கருணாகரக் கடவுள் திரிகரண சுத்தியோடு காரிய சித்தியும் அளிப்பாராக.

# பிரதி அதிபர் உள்ளத்திலிருந்து......

திருமதி சோமேஸ்வரி கைலாசநாதன்

B. Sc., Dip-in-Education.



யாழ்ப்பாண மண்ணிலுதித்த சேர். பொன்னம்பலம் இராமநாதன் உலகினுக்கே அறிவொளி பாய்ச்சிய மாந்தருள் மாணிக்கம் ஆவார். அவர் வாழ்ந்தது எண்பது ஆண்டுகள். அரை நூற்றாண்டுக்கு மேலாக மக்கள் சேவையே மகேசன் சேவையாகக் கண்டவர். அவர் வரலாறு அக்கால இலங்கைச் சரித்திரமாக அமையும். சரித்திர ஆய்வாளர்களும் இலங்கை மக்களும் இதனை ஒப்புக்கொள்வர். அவர் தம் மேதாவிலாசம், பல்துறை தோய்ந்த மாண்பினைக் கொண்டதாக அமைந்தது. பன்மொழிப் புலமையும், தேடிய ஞானச் செல்வமும், கிழக்கிற்கும் மேற்கிற்கும் சமயநெறி பரப்பும் ஒரு உன்னத பாலமாக அவரை இணைத்தது. சமரச ஞானசீலம் பேசி அறிவொளி பரப்பும் கலங்கரை விளக்கமாகப் பெருந்தகை இராமநாதன் மிளிர்ந்தார்.

எம் மண்ணிலே, கல்விச்செல்வ ஆலயங்களாக நங்கையர்க்கு இராமநாதன் கல்லூரியையும், நம்பியருக்கு பரமேஸ்வராக் கல்லூரியையும் தமது அறுபதுகளில் தாபிதம் செய்தார். இந்நிகழ்வை, அவர்தம் மணிவிழாப் பணியாக நாம் போற்றலாம்.

எண்பது ஆண்டுகள் நிறைவைக் கண்ட எங்கள் கல்லூரி, 1913இல் பரந்த நிலப்பரப்பில் (25 ஏக்கர்) இயற்கை இயைந்த அமைதி அழகுச் சூழலில், இணுவில் கிராமத்தில், இராமநாத வள்ளலின் நேரடிக் கண்காணிப்பில் தோற்றுவிக்கப்பட்டது. இராமநாத அருளாளரின் உள்ளக் கிடக்கை – இந்திய ஞானிகளின் ஞானத்தோடு, தமிழ், வடநூல்கடல், இலக்கியச் செல்வங்களும் இணைந்து, பிரித்தானியரின் மிகச் சிறந்த கல்விப் பாங்கினைத் தமிழ் மாணவிகளுக்கு ஊட்ட வேண்டும் என்பதே ஆகும். இக்கல்லூரியின் முதல் அதிபராக திருமதி இமேரி என்னும் ஆங்கில அம்மையார் நியமிக்கப்பட்டார்.

கல்லூரியின் மகுட வாசகம்.

''கருதரிய சிற்சபையில் ஆனந்த நிருத்தமிடும் கருணாகரக் கடவுளே,
திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்''.

ஆக அமைந்தது. குருகுல வாச முறைப்படி மாணவிகள் கல்வி கற்பதற்கேற்ற முறையில் சிறந்த விடுதி வசதிகளை 200 மாணவிகள் தங்குவற்கு ஏற்படுத்தப்பட்டது. இங்கு ''பண்மிழற்றும் பாவையர்கள் பரமனது பதம் பாடி, விண்களிக்க'' காலை மாலை பிரார்த்தனை செய்யும் பாங்கு கண்கொள்ளாக் காட்சியாகும்.

இராமநாதன் தன்னுடைய வதியும் இருப்பிடத்தை இக் கல்லூரியி லேயே அமைத்துக் கொண்டார். அவர் பரமபதம் அடையும் மட்டும் இக் கல்லூரியின் வளர்ச்சியில், மேம்பாட்டில், தன்னை நேரடியாக இணைத் துக் கொண்டார். சைவ மங்கையர் சபை, சைவபரிபாலனசபை, சைவ வித்தியா விருத்திச் சங்கம், இன்னோரன்ன சமய நிறுவனங்கள் தலைவர் இராமநாதனுடன் தொடர்புடையன. ஆகவே இக்கல்லூரியில் சிவநெறி மரபு, பெரிய புராணக் கலாசாரம், நிறையவே மாணவி களின் ஒழுக்க சீலத்தைப் பற்றிக் கொண்டன. இக்கல்லூரி, நற்பிர சைகளாய், நல்மாதாக்களாய், இந் நாட்டுக்கு வழங்கிய மாதர் மாணிக் கங்கள் பலர். இன்றும் பல மாணவ முத்துக்கள் இராமநாதனின் பாரம் பரியத்தில், அர்ப்பணப்பு நிறைந்த ஆசிரியர் குழாத்தினால், மகோன்னதம் நிறைந்த எதிர் காலத்தைக் கட்டிக் காக்கும் பணியில் உருவாக்கப்படுகின்றனர்.

இராமநாதனுக்குப் பிரியமான இசையைப் பரப்பும் கல்லூரியும், தற்போது யாழ். பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பிரிவாக எமது கல்லூரி வளாகத்திலேயே செயற்படுகிறது. முன்பு ஆசிரியப் பெண்களை உருவாக்கும் பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும் இக் கல்லூரியில் இயங்கியது.

சேர். பொன். இராமநாதனின் மறைவுக்குப் பின்னர் இக் கல்லூ ரியின் சகல பொறுப்புக்களையும் சீமாட்டி லீலாவதி அம்மையார் அவர்கள் பொறுப்பேற்று தனது கணவரின் விருப்புகளை நிறைவேற் றினார்.

இலங்கையின் பெரு மனிதராகிய இராமநாதன் அவர்களுக்கு கொழும்புப் பாராளுமன்றவளாகத்தில், மக்களா ல் சிலை எடுக்கப்பட்டி ருக்கிறது. ஆண்டுதோறும் அவர் மறைந்த தினத்தில் நாட்டு முக்கியஸ் தர்களால் மாலை சூட்டப்பட்டு கௌரவிக்கப்படுகிறார். எங்கள் கல்லூரியிலே அவரது குருபூசை தினத்தில், அவரைச் சமாதியாகக் கொண்ட இராமநாதேஸ்வர ஆலயத்தில், அபிடேக பூசா ஆராதனைகள் சிறப்புடன் நடைபெற்று மகேஸ்வர பூசையுடன் நிறைவு பெறுகிறது. அவர் அமைத்த பரமேஸ்வராக் கல்லூரியில் (தற்போதைய யாழ். பல் கலைக்கழகம்) அவர் பற்றிய நினைவுப் பேருரை நடைபெறுகிறது.

எங்களுக்கு செந்தமிழ் இலக்கணம், முதல்முதலில் தமிழில் பகவத் கீதை, முதலியவற்றைத் தந்த இல்லறஞானி இராமநாதப் பெரியார்க்கு, எல்லாம் 'பரமேஸ்வரனின் சொத்தாகக்' கண்டார்க்கு, நாம் கொண்ட நன்றிப் பெருக்கால், எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கம், எம் கல்லூரியில் அவருக்குச் சிலை எடுக்கிறது. இப்பணி காலம் கடந்தது ஆயினும் போற்றப்படவேண்டிய செயல் ஆகும்.

இக் கல்லூரியிலே கல்வி கற்று, இதன் பாரம்பரியத்தில் ஊறி, பின் இக்கல்லூரியிலேயே ஆசிரியத் தொழில் புரிந்து, பிரதிஅதிபர் நிலையை அடைந்து என்றும் எம் நிறுவுநர் சேர். பொன். இராமநாதன் மேல் பக்திசிரத்தை, விசுவாசம் உடையவளாக இருப்பதற்கு எல்லாம் வல்ல நடராஜப் பெருமான் அருள் பாலித்ததை எண்ணி எண்ணி இறும்பூதெய்துகிறேன்.

இராமநாதன் நாமம் நீடூழி வாழ்க!

அதிபர், ஆசிரியர்குழாம் 1994



# யா/இராமநாதன் கல்லூரி நிறுவுநர் நினைவுரை

## 1993-11-20

**ஆர். எஸ். நடராசா**, M. A., Dip-in-Ed, S. L. E. A. S.
அதிபர்,
பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

ஈழத்தில் முதல் சைவப் பெண்கள் கல்லூரியை நிறுவிப் பெண்கள் உயர்கல்வி வரலாற்றுக்குப் புதிய பரிமாணம் தந்த நிறுவுநரை நினைவு கூர்ந்து அவர் வழங்கிய செழுங்கலைச் செல்வ வாய்ப்புக்களைச் செவ்வனே பயன்படுத்தி தமிழ்ச் சமூகத்தை மேம்படுத்தும் முனைப்போடு இன்று இங்கு நாம் கூடியுள்ளோம்.

ஒரு சமூகத்தின் பண்பாட்டுச் செல்வங்கள் சந்ததிதோறும் விளக்கம் பெற்று உணரப்பட்டு அவற்றின் உச்சப்பயன் பெறச் செய்யும் வாய்ப்புக்கள் திட்டமிட்டு வழங்கப்பட வேண்டும்.

நமது வாழ்வுச் சூழல் சதா மாறிக் கொண்டிருப்பதனைக் கருத்திற் கொண்டு காலத்துக்குப் பொருத்தமான உத்திகளைப் பயன்படுத்தி நமது முன்னோர் அரும்பாடுபட்டுச் சேர்த்து வைத்த பண்பாட்டுச் செல்வங்களை உணர்ந்து சிறப்பாகப் பயன்படுத்தி மக்கள் முன்னேற உதவ வேண்டியது கற்றறிந்த சான்றோர் கடனாகும். எம்முன்னோர் மக்கள் முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு ஆற்றிய வரலாற்று முக்கியத்துவம் மிக்க பணிகள் எமது வாழ்வுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவனவாகும். தொடரும் பரம்பரைகள் தொல்லைப்படாது அறிவொளியின் துணைக் கொண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழக் கல்விச் சாலைகள் வழங்கிய வள்ளல் சேர் பொன்னம்பலம் இராமநாதனை நினைவு கூர்ந்து அவரது மாசற்ற கல்விப் பணிகளைப் பயன்படுத்திப் பலரும் முன்னேற்றம் காண முயற்சிக்க வேண்டும் என்பதால் அவசியமான சில கருத்துக்களைச் சமர்ப்பிக்க விழைகின்றேன்.

நடுவூருள் நற்கனி மரம்போல் பல் கலை பயிற்றிப் பணியாற்றும் இராமநாதன் கல்லூரியை நிறுவிய வள்ளல் சேர் பொன்னம்பலம் இராமநாதனின் கல்விச் சிந்தனையும் அவரின் எதிர்பார்ப்புக்களும் என்ன என்பதை ஆராய்வதும் அவர் கல்வி நோக்கத்தை நிறைவுறுத்தும் முயற்சியில் மக்கள் ஈடுபடல் நமது சமூகத்துக்குப் பெரும் பயன்தரும் என்பதனைப் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள்.

> ''இலங்கையின் தவப்புலவர்களில் ஒருவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் என்பதில் எவர்க்கும் கருத்து வேறுபாடு இல்லை . ... இவ்வுலகில் தம்புகழ் நிறீச் சென்ற பெருமக்களுள் ஒருவர் என்பதை ஊரும் உலகமும் ஒப்புக்கொண்டுள்ளன.''[1]

எனப் பாராட்டினார்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்.

> ''தமிழ் மக்களின் மானத்துக்கு ஈனம் நேரும் பொழுது உயிரினும் மானம் சிறந்ததெனக் கொண்ட பழந்தமிழ்

> மக்களின் வழித்தோன்றலாகிய இராமநாதன் என்னும் வீரபுருஷர் இல்லையே எனயாம் வாட்டமடைகின்றோம். '' 2

எனப் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் அருமையை எண்ணி ஏங்கினார் சிங்கள மக்களின் தலைவரான சேர் ஜெறாட் விஜயக்கோன்.

> '' சிங்கள மக்களை இவர் (இராமநாதன்) பாதுகாத்ததுபோல் அவர்களது சொந்தச் சாதியார் கூட பாதுகாத்திருக்க மாட்டார்கள் 3

எனப் பாராட்டினார்.

சென்னைப் பல்கலைக் கழகத்துத் துணை வேந்தராயிருந்த பேராசிரியர் சிட்டிபாபு

> '' சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஓர் உலகமேதை அவரது ஞாபகம் மென்மேலும் துலங்கச் செய்யும் ஆக்கங்கள் இடம்பெறுவது மனித முன்னேற்றத்துக்குஎன்றும்உதவும்''4

என மதிப்பீடு செய்தார். இன்னும் பற்பல ஆன்றவிந்தடங்கிய கல்விச் சான்றோரால் நம்பெரும் மதிப்புக்குரிய பெருமகனாகக் கொள்ளப்பட்டவரே இக்கல்லூரியின் நிறுவுநர்.

நல்லை நகர் நாவலர் பெருமானால் 28 வயது இளைஞராக இருந்த பொழுது தெரிவு செய்யப்பட்டுச் சட்ட நிரூபண சபைக்குத் தமிழர் பிரதிநிதி ஆக்கப்பட்டதிலிருந்து ஐம்பது ஆண்டுகள் நாவலரின் வாரிசாய் ஒப்பற்ற தேசியத் தலைவராய் அரும்பணி ஆற்றிய சேர் பொன்னம்பலம் இராமநாதனின் கல்விப் பணிக்கு நிலையான நினைவாலயமாய் நிலைத்து நிற்பது அவர் அமைத்த இராமநாதன் கல்லூரியே.

1851ஆம் ஆண்டு சித்திரை 16ஆம் திகதி கொழும்பு செட்டித் தெருவில் அமைந்த மாளிகை போன்ற வீட்டில் பொன்னம்பல முதலியாருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தவர் இராமநாதன். திரு. குமாரசாமி இவரது அண்ணன் அருணாசலம் இவரது தம்பி. இலங்கைச் சட்ட நிரூபண சபையில் 1834ஆம் ஆண்டில் தமிழரின் முதற்பிரதிநிதியான முதலியார் இவரது தாய்வழிப் பேரன். கலாயோகி ஆனந்தக்குமாரசாமியின் தந்தை சேர் முத்துக்குமாரசாமி இவரது தாய் மாமன்.

கொழும்பு அக்கடமியிலும் சென்னை இராசதானிக் கல்லூரியிலும் கற்ற இவர் பட்டம் பெறுமுன் சட்டம் பயின்று 22 ஆவது வயதில் வழக்கறிஞரானார். மாமன் சேர் முத்துக்குமாரசாமியாலும் இராணி வழக்கறிஞர் சேர் றிச்சேட்மோர்கனாலும் நெறிப்படுத்தப்பட்ட இராமநாதன் கீழைத்தேச மேலைத்தேச விழுமியங்களின் திரளமைப்பாய் உருவானார். 1879ஆம் ஆண்டு ஆறுமுகநாவலர் பெருமானின் முயற்சியால், திடீரென மரணமடைந்த மாமன் சேர் முத்துக்குமாரசாமியின் இடத்துக்கு நியமிக்கப்பட்டார். தமிழ் அறிஞர் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களின் அன்பையும் இலக்கணம் இராமசாமி எனப்பட்ட அருட்பரானந்தரின் ஆன்மீக வழிகாட்டலையும் பெற்று நிறை மனிதனாய் உருவானார்.

அரசியல், சட்டம், கல்வி, சமயம், சமூகம், ஆத்மீகம் எனப்பல துறைகளில் அரும்பணி ஆற்றினராயினும் கல்வித் துறையே அவருக்கு ஈடிலாப் புகழ் தந்து நிற்பது. அவரது பல்துறைப் பணிகளை நன்கு ஆராய்ந்த சேர் பரன் ஜெயதிலகா,

> '' சேர் பொன்னம்பலம் இராமநாதனின் வியத்தகு பல்துறைப் பணிகளுள் அவருக்கு நிலைத்த நினைவுச் சின்னமாக நிலைக்கப் போவது அவரது கல்விப் பணியே '' 5

எனக் குறிப்பிட்டுள்ளார்.

இராமநாதன் அவர்களும் சாதனை நிறைந்த தம் பற்பல பணிகளுள் அதிக திரிகரண சுத்தியோடு ஈடுபட்டுக் காரிய சித்தி கண்ட பணி கல்விப்பணியே என்பதனைத் தனது வாக்காலும் வாழ்வாலும்

உறுதிப்படுத்தியுள்ளார். இராமநாதன் அவர்களின் கல்விப் பணிபற்றி நன்கறிந்த அறிஞர் அம்பிகாபாகன் அவர்கள்.

> ''சேர் இராமநாதன் இலங்கை மக்களுக்குக் குறிப்பாகத் தமிழ் மக்களுக்குப் பல அரிய தொண்டுகள் செய்துள்ளார். அவற்றுள் தலைசிறந்தது இராமநாதன் கல்லூரியைத் தாபித்ததாகும்.'' 6

எனக் குறிப்பிட்டுள்ளார்.

இக் கருத்தையே 27–11–1927 இல் இராமநாதன் கல்லூரிக்கு வருகை தந்த மகாத்மா காந்தி அடிகளும்

> ''சேர் இராமநாதனின் பரோகாரத்துக்கும் சிந்தனைச் சிறப்புக்கும் நினைவாலயமாக நிலைத்து நிற்கும் இந்நிறுவனத்துக்கு வராதிருந்திருப்பேனாயின் என் வாழ்வெல்லாம் கவலைப்பட்டிருப்பேன்'' 7

எனக் கூறினார்.

இவற்றிலிருந்து இராமநாதன் கல்லூரி இந்நாட்டில் சைவத் தமிழ் பெண்கள் உயர்கல்விக்குக் கலங்கரை விளக்காயிருந்தது எனக் கொள்ளலாம்.

சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் இராமநாதன் கல்லூரியை அமைத்தது மக்களின் நீண்ட காலக் கோரிக்கையை நிறைவுறுத்திய செயற்பாடாகும். 10-05-1905இல் வெளியான 'இந்துசாதனம்' பத்திரிகையில் சைவப் பெண்களுக்கு உயர்கல்வி நிலையம் ஒன்றினை அமைக்க வேண்டும் என்னும் விடயம் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இது இராமநாதன் அவர்களின் சிந்தனையைத் தூண்டியிருக்கலாம், அவர் அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளில் காணப்பட்ட பெண்கள் உயர்கல்வி நிலையங்களை நேரடியாக அறிந்து கொண்டார். அமெரிக்காவில் 1905ஆம் ஆண்டில் அவரது எதிர்காலத் திட்டம் பற்றி வினவியபோது

> ''நவீன நிலைமைக்கு ஏற்ற கல்வியினையும் எமது பண்டைய நூல்களில் பொதிந்து கிடக்கும் இலக்கிய தத்துவ அறிவையும் இணைத்துத் தகுந்த கல்லூரி அமைப்பதே எனது முழு முயற்சியுமாகும்'' 8

என விடையளித்தார்.

சைவ ஆண்பிள்ளைகளுக்கு அவர்களின் சமயச் சூழலில் உயர்கல்வி பெறக் கல்லூரிகள் இருந்தன. ஆனால் சைவப் பெண்களுக்கு அவ்வாறான கல்வி பெற வாய்ப்பிருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் அன்றிருந்த கிறீஸ்தவ, கத்தோலிக்கப் பெண்கள் பாடசாலையில் கல்வி கற்ற சைவப் பெண்பிள்ளைகள் தமது சொந்தப் பண்பாட்டு விழுமியங்களை அறியாதவராயும் தேசிய உணர்வு அற்றவராயும் உருவானமை அவரை வேதனைப்படுத்தியிருக்கவேண்டும். எனவே சைவப் பெண்கள் உயர்கல்விக்கு உதவும் வகையில்

> ''கோப்பாயில் இருபது ஏக்கர் நிலத்தை வாங்கினார். அவ்விடம் போக்குவரத்து வசதி குறைந்தது எனச் சுட்டிக் காட்டவே, அவ்விடத்தை விட்டுச் சுன்னாகத்தில் அதே விஸ்தீரணமான நிலத்தை வாங்கினார் கோப்பாயில் இராமநாதன் அவர்கள் வாங்கிய நிலத்தில் ஒரு பகுதியிலேயே இப்போது ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இயங்கி வருகின்றது'' 9

சுன்னாகத்தில் மருதனாமடச் சந்தியில் வாங்கப்பட்ட நிலத்தில் 03-06-1910 அன்று காலை 7–30 மணிக்கு அடிக்கல் நாட்டிக் கட்டிடவேலை ஆரம்பிக்கப்பட்டது. கட்டிடம் வளர்ச்சியுற்ற காலத்தில் இராமநாதன் அவர்கள் சென்னையில் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்

> ''பத்து வயதுக்கும் பதினெட்டு அல்லது பத்தொன்பது வயதுக்கும் இடைப்பட்ட பெண்பிள்ளைகள் பண்புமிக்க ஆங்கில இந்துப் பெண்களிடம் கல்வி பெறுவர்'' 10

எனத் தனது பெண்கள் உயர்கல்வி நிலையத்தில் தான் வழங்க உத்தேசித்த கல்விச் சூழலை விளக்கினார். அப்பேட்டியில் அவர்

மேலும் குறிப்பிடுகையில் ஆங்கில நாட்டினதும், சொந்தப் பண்பாட்டினதும் சிறந்த விழுமியங்களைப் பெண்கள் பெற்று நல்ல மனைவியராக வேண்டிய கல்வியைப் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்படும் எனக் குறிப்பிட்டார். மேலும் அவர் அங்கு குறிப்பிடுகையில்.

> " கடந்த பதினெட்டு மாதங்களில் பல உள்நாட்டு பள்ளிக்கூடங்கள் இக் கல்லூரியில் கற்பதற்குப் பெண்பிள்ளைகளைத் தயாரிக்க உருவாக்கப் பட்டுள்ளன " [11]

என்றார்.

இதனால் தான் அமைக்கவிருந்த சைவப்பெண்கள்கல்லூரி ஏற்கனவேஇயங்கி வந்த கிறீஸ்தவப் பெண்கள் உயர்கல்விப் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்று வந்த சைவப் பெண்பிள்ளைகளைக் கவரும் நோக்கம் அற்றது என்பதனைத் தெளிவுறுத்தினார்.

07 - 12 - 1911 இல் வெளியான " இந்து ஓகன் " பத்திரிகையில்.

> " திரு இராமநாதனின் பெண்கள் கல்லூரி யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ளது. அது இலங்கைத் தேசியத் தின்வரலாற்றில் புதிய சகாப்தத்தை உருவாக்குவதாயிருக்கும் " [12]

எனக் குறிப்பிடப்பட்டது.

தனது கல்லூரிக்குச் சிறந்த அதிபரைத் தெரிவு செய்வதில் அதிக அக்கறை செலுத்னார். அவரின் தேடுதலின் பெறுபேறாய் இங்கிலாந்தின் இலக்கிய வட்டத்தில் பெரும் மதிப்புப் பெற்றவரும் அறிஞர் பேனாட் சோவின் அன்புக்கும் உரியவராயிருந்த திருமதி புளோறன்ஸ் ஏமேறி என்பவரே அதிபராகத் தெரிவானார். ஆத்மீகத் துறையில் ஈடுபாடுமிக்க இவர் மீண்டும் இங்கிலாந்துக்குத் திரும்பிச் செல்வதில்லை என்ற வைராக்கியத்தோடு தனது பதவியை ஏற்றுத் தன்னைக் கல்லூரிக்கு முழுமையாக அர்ப்பணிக்க முன்வந்தார். அதிபரோடு பதினொரு ஆசிரியர்கள் கல்லூரி ஆரம்பிக்கப்படு முன்பே நியமிக்கப்பட்டனர்.

திறக்கப்படவுள்ள இலங்கையின் முதற் சைவப் பெண்கள் கல்லூரியை நிறுவிய வருக்கு நன்றி தெரிவிக்க 15 - 01 - 1913 இல் கலையரசு சொர்ணலிங்கத்தின் தந்தை திரு. எஸ். கே. லோட்டன் தலைமையில் கூட்டப்பட்டு வள்ளல் இராமநாதனின் கல்விப் பணிப் பங்களிப்பினைப் பலரும் பாராட்டி நன்றி தெரிவித்தனர். புதிய கல்லூரி இராமநாதன் கல்லூரி எனப்பெயரிடப்பட்டு 20 - 01 - 1913 திங்கள் காலை 10-00 மணிக்கு சமயச் சடங்குகளுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது இந்நிகழ்ச்சியை விமர்சித்த " இந்து ஓகன் " பத்திரிகை " இலங்கை இந்துக்கள் தம்வாழ்வில் என்றும் நினைவில் வைத்திருக்கும் நாள் " [13] எனக் குறிப்பிட்டது இக்கல்லூரிக்கு அன்று மக்களிடம் இருந்த வரவேற்பினைக் காட்டுவதாகும்.

முதல் அதிபர் புளோறன்ஸ் ஏமேறியின் ஆளுமைச் சிறப்பும் நிறுவுநரும் அவர் பாரியார் லீலாவதி அவர்களும் கல்லூரியைத் தமது சொந்தக் குழந்தை போலக் கருதிப் பணியாற்றியதும் " கீழைத்தேசத்தில் ஒப்பற்ற கல்வி நிறுவனம் " என்னும் அளவுக்குக் கல்லூரியினை விருத்தியுறச் செய்தன. இக்கல்லூரிக்கு இலங்கையில் பலபாகங்களிலிருந்தும் மலேயா, சிங்கப்பூர் பர்மாவிலிருந்தும் சைவசமயப் பண்பாட்டுப்பின்னணியில் உயர் கல்வி பெற மாணவிகள் வந்து கல்வி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஔவையாரின் 'ஆத்திசூடி' இராமநாதன் அவர்கள் எழுதிய விளக்கவுரையோடு இக் கல்லூரியின் ஒழுக்கப்போதனையின் அடிப்படையாய் அமைந்தது. சைவ சமய கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த குருகுலக் கல்விச் சூழலை வழங்குவதாகவே கல்லூரி இயக்கப்பட்டது. புலன்களின் புன்மை நீக்கிப் பக்திப்பரவசமூட்டும் வகையில் தேவார திருவாசகம் பண்ணோடு பாராயணம் செய்யும் தமிழர் பாரம்பரியம் கல்லூரியில் பேணப்பட்டது. பெண்பிள்ளைகள் அணிந்த

சீருடையும் தமிழர் சமூக விழுமியங்களைப் பேணிக்காத்து மேலும் சிறப்புறுத்தும் வகையில் அமைந்தது. அக்காலப் பெண்கள் உயர்கல்வி நிலையச் சீருடையில் தேசியத்தை மீளவலியுறுத்தும் முக்கியமான நடவடிக்கையாகக் கருதப்பட்டது.

சேர் பொன்னம்பலம் இராமநாதன் தனது கல்லூரியில் தேசிய கல்விப் பண்பாட்டுப் பாரம்பரியம் மறுமலர்ச்சி பெறவும் சிறப்புறவும் வேண்டிய வாய்ப்புக்களையும் வசதிகளையும் ஏற்படுத்தினார்

இவரது கல்வி முயற்சிகள் துரிதமாகப் பயன்தர இவர் அன்று தேசிய மட்டத்தில் பெற்றிருந்த பெருமதிப்பும் காரணமாயிருந்தது. இக்கல்லூரிநாட்டின் உயர்மட்டத்தாரின் கவனத்தைப் பெற்றதோடு தேசிய பண்பாட்டுத்திட்டங்கள் உருவாக்கப்படும் வளநிலையமாகவும்செயற்பட்டது குறிப்பாகச் சைவமக்களுக்குப் பெரும் கல்விப் பயன்தந்த பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவவும் சைவவித்தியா விருத்திச சங்கத்தை உருவாக்கவும் சைவப் பெண்கள் ஆசிரிய கலாசாலையை நிறுவவும் இக்கல்லூரிவிருத்தியால் பெற்ற அனுபவத்திரள் ஆக்கமும் ஊக்கமும் தந்தது எனலாம்.

இக்கல்லூரியின் கல்விப் பயனை விரிவுபடுத்த நிறுவுநர் சைவச் சிறுமியர் நிறைவாழ்வு இல்லத்தினை ஆரம்பித்தார். பழைய மாணவியர் தொடர்ந்து கல்வி விழுமியங்களைப் பேணி அவற்றைமேலும் விருத்தியுறச் செய்ய வேண்டும் என்னும் விருப்பில் சைவமங்கையர் சபையினை அமைத்தார். அச்சபையில் அவர் 1927 ஆம் ஆண்டு பங்குனித்திங்களில் இச்சபையினர் மத்தியில் பேசும் போது.

> ''பழைய மாணவியரும் ஆசிரியரும் நல்லறிவுச் சுடரையும் சமயத்தையும் தாம் மேற்கொண்ட வாழ்வு வட்டத்தினை ஒளி பெறச் செய்வதில் ஒன்றிணைவார்களாக'' 14

எனவேண்டுகோள் விடுவித்தார். இதன்படியே பாக்கியம் கந்தசாமி என்னும் இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவி மாத்தளை நகரில் பாடசாலையை அமைத்தார். நிறுவுநரின் நீண்டகாலக்கல்விப் பணிக்கு ஊற்றாக அமைந்த இராமநாதன் கல்லூரி பலராலும் நயக்கப்பட்ட தமிழர் பண்பாட்டுக் கருவூலமாகக் காணப்பட்டது. இக் கருத்தினை உடுவில் கிறிஸ்தவப் பெண்கள் கல்லூரியில் நீண்டகாலம் அதிபராயிருந்த செல்வி எல். ஜீ. புக்வால்ரர் அம்மையார்.

> ''தமிழ் மொழியிலும் இந்திய இசையிலும் மக்களின் சீரிய பாரம்பரியப் பழக்க வழக்கங்களிலும் இங்கேயே பெரும் புதையலைக் கண்டுகொள்ள அவரும் கல்லூரியும் உதவினர்'' 15

என வாழ்த்தி மகிழ்ந்தார்.

1935 ஆம் ஆண்டில் இலங்கையில் ஆள்பதியாயிருந்த திரு றெஜினோல்ட் ஸ்ரப்ஸ் இருபத்திரண்டு ஆண்டுகள் இடைவெளியின் பின் கல்லூரிக்கு வந்த பொழுது கல்லூரி நிறுவுநரின் இலட்சியங்களை நிறைவுறுத்தும் வகையில் செயற்படக் கண்டு.

> ''இன்று எனது நண்பர் பொன்னம்பலம் உயிரோடு இருந்தால் பெண் பிள்ளைகளின் இன்றைய செயற்பாடுகளைக் கண்டு பெருமகிழ்வெய்தியிருப்பார்'' 16

தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதையும் கருத்திற் கொண்டு கல்லூரியின் வளர்ச்சியை உய்த்துணரலாம்.

கல்விப் பணிக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்த நிறுவுநரும் அவர் குடும்பத்தினரும் கல்லூரிக்கென விட்டுச் சென்ற வளங்களும் தன்னலன் பெரிதெனக் கருதா அதிபர்களும் ஆசிரியர்களும் கல்லூரி துரித வளர்ச்சியடைய உதவினர். 1962 இல் 27 மாணவிகளும் 1963 இல் 26 மாணவிகளும் பல்கலைக்கழக அனுமதி பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால் கல்லூரியின் இன்றைய நிலை மகிழ்ச்சிக்குரியதாயில்லை. நிறுவுநரின் இலட்சியக் கல்விக்கருமத் தொடர் நிறை

வேறும் வாய்ப்புக்கள் இல்லை. வளங்கள் மிகுந்த இராமநாதன் கல்லூரி இன்னும் முன்னேற்றம் கண்டிருக்கலாம்.

ஒரு நிறுவனத்தின் முன்னேற்றத்துக்கு அந்நிறுவன ஆளணித் தொகுதியினரின் அர்ப்பணம் மிக முக்கியம். இங்கு ஆசிரியப் பணியினை மேற்கொள்பவர்கள் நிறுவுநர் இலட்சியங்களை நிறைவுறுத்தும் முயற்சியில் தொடர்ந்து பங்களிப்புச் செய்ய எதிர்பார்க்கப்படுகின்றனர்.

இலங்கையில் கல்விப் பணிக்கு சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆற்றிய பணிபோல் எவரும் ஆற்றினாரில்லை. அவர் வழங்கிய வளங்களே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாகி வளர்ச்சியுறப் பெரிதும் உதவின. எனினும் பரமேஸ்வராக் கல்லூரியை நினைவு கூர்வதற்கும் அது தமிழுக்கும் சைவத்துக்கும் கல்விக்கும் ஆற்றிய பணியை பிற் சந்ததியார் அறிந்து ஊக்கம் பெற வாய்ப்பு அற்றுப் போயிற்று. வரலாற்று முக்கியத்துவம் மிக்க இராமநாதன் கல்லூரியாவது முறையாகப் பேணப்பட்டுத் தமிழர் கல்வி வரலாறு விளக்கமுறச் செய்வதை நாம் நம் கடனாகக் கருத வேண்டும்.

சைவத் தமிழர் கல்வி மேம்பாட்டுக்குப் பெரும் பணியாற்றிய நிறுவுநரைத் தக்க முறையில் நினைவு கூரச் செய்யும் அம்சங்கள் உருவாக்கிப் பேணப்படுவது கல்விப் பணியாகும். இராமநாதன் கல்லூரி வளவில் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் சிலை நிறுவப்படுவது ஒரு சமூகத் தேவை. அவர் கல்விப் பணி தொடர்பான அரும்பொருட் காட்சிச் சாலை அமைவதும் நன்மை பயப்பதாகும்.

இவ்வேண்டுகோளைக் கல்லூரி நிறுவுநரின் கல்வி இலட்சியத்தோடு இணைத்துக் கண்டு தெளிந்து தேசிய மறுமலர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் அவர் இராமநாதன் கல்லூரி மூலம் வழங்கிய பங்கும் பணியும் உணரப்பட வேண்டும். தமிழர் தேசிய நலனில் அக்கறை கொண்டோர் திரிகரண சுத்தியோடு நிறுவுநரையும் அவர் தமிழர் இலட்சியக் கல்லூரியாய் அமைத்த இராமநாதன் கல்லூரியையும் நன்கு அறிந்து பிற்சந்ததியார் பயன்படச் செய்யும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

கல்விக்கு முன்னுரிமை கொடுக்கும் சமூகமே முன்னேற்றம் காணமுடியும். இன்று வளர்ச்சியடைந்த நாடுகள் எல்லாம் கல்வி ஆய்வு கூடங்களாகச் செயற்படக்காண்கின்றோம். அங்கு கல்வி நிலையங்கள் பல நூற்றாண்டுகள் பழைமை மிக்கனவாய் இருக்கின்றன. அவை தேசிய முன்னேற்றக் கல்வி நிலையங்களாகத் தொடர்ந்து மதிக்கப்படும் நிலையில் பேணப்படுகின்றன. இவற்றைக் கருத்திற் கொண்டு செயற்படுவது சிறந்த கல்விப் பணியாகும். இராமநாதன் கல்லூரி நின்று நிலைத்துப் பயன்தர வேண்டும். இக் கருத்தை வலியுறுத்திய கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை அவர்களின் பாடலை நினைவூட்டி அமைகின்றேன்.

''குன்றை வில்லாய் வளைத்த பிரான்
குகனை ஈன்ற கண்ணுதலான்
மன்றுள் நடனம் செய்கின்ற
மங்கை பாகன் திருவருளால்
என்றும் என்றும் தழைத்தோங்கி
இராமநாதன் கல்லூரி
நன்று நாடும் சுன்னாக
நகரில் வாழ்க வாழ்கவே'' [17]

**அடிக்குறிப்பு :**

1. கைலாசபதி க. பேராசிரியர் — சேர் பொன்னம்பலம் இராமநாதன் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம். சொக்கன் 1976 பக்கம் IV
2. சுவாமி விபுலானந்தர் — Ramanathan College Silver Jubilee Souvenir 1936 P. 79
3. விஜயகோன் ஹெறால்ட் சேர் — "ஸ்ரீலங்கா" ஏப்ரல் 1951 மலர் 3 இதழ் 5 பக்கம் 8
4. சிட்டிபாபு பேராசிரியர் — 27-09-1982 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய சேர் பொன் இராமநாதன் நினைவுச் சொற்பொழிவு
5. ஜெயதிலகா பரண் சேர் Ramanathan College Silver Jubilee Souvenir 1936 P 49
6. அம்பிகைபாகன் ச. — Ramanathan College Special Number 1980 P 16
7. காந்தி மகாத்மா — With gandhiji in Ceylon Mahadev Desa Tneplecane Madras 1928 P 146
8. இராமநாதன் பொ சேர் — Western Pictures for Eastern Students Thacker & Co Londan 1907 P. 109
9. அம்பிகைபாகன் ச. — Ramanathan College Diamand Jubilee Number 1973 P 17
10. Hindu Organ — 09-08-1911 P. 23 Col 3
11. Ibid
12. Hindu Organ — 07-02-1912 P. 123 Col 3
13. Hindu Organ — 22-01-1913
14. இராமநாதன் பொ சேர் - Ramanathan College Silver Jubilee Souvenir 1936 P. 8
15. Book walter S. G. , ,, P. 16
16. Reginold Stulebs ,, ,, P. 12
17. தேசிகவிநாயகம்பிள்ளை கவிமணி — "மலரும் மாலையும்" பாரிநிலையம் ஒன்பதாம் பதிப்பு சென்னை பக்கம் 253

# இராமநாதன் அவர்கள் செயற்கரிய செய்த பெரியார்

**மு. ஞானப்பிரகாசம் அவர்கள்**
*இளைப்பாறிய அதிபர்,*
*பரமேசுவராக் கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.*

மகான்கள் பெற்ற அனுபவங்களும், ஞானிகள் கண்ட காட்சிகளுமே எங்கள் சமயத்தின் மூலதனங்களாம். அவற்றை செவ்வனே சித்திரித்துக் காட்டும் புனித நிலையங்களே எங்கள் ஆலயங்களாம். அதனால் எங்கள் ஆலயங்கள் விலை மதிப்பற்றவை. கோடி கோடி பொற்காசுகள் பெறுமதிப்புள்ளவை. இந்த உண்மை எங்கள் எல்லோருக்கும் நன்கு தெரியும். ஆயினும் இந்த உண்மையைத் தமது சிந்தனைகளாலும் சாதனைகளாலும் நிறை வேற்றி வைத்தவர் இராமநாதன் அவர்கள். அவர்கள் சிறப்பாக யாழ்ப்பாணத்தின் மீதும் பொதுவாக இலங்கை மீதும் கொண்ட களிபேரிரக்கத்தாலும், கருணையினாலும் கோடி கோடி பொற்காசு பெறுமதியான அறக் கட்டளைச் சொத்துக்களை வழங்கியுள்ளார்கள். அச்சொத்துக்கள் தென்னிந்திய தமிழ் நிலத்திலும், யாழ்பாணத்திலும், கிளிநொச்சி முதலிய வன்னிப் பகுதிகளிலும் கொழும்பிலும் தென்னிலங்கைப் பகுதியிலும் பரவலாக உள்ளன. குறித்த அச்சொத்துக்களின் விபரத்தை எமக்குத் தெரிந்த அளவில் கீழே தருகின்றோம். யாழ்ப்பணத்திலும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் வாழும் சைவ சமயிகள் சைவ சமயம் சார்பாக வழங்கப்பட்ட இச்சொத்துக் களைப் பராமரிப்பதற்குரிய ஓர் அன்பு இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டு மென்று யாம் விரும்புகின்றோம்.

*கஷ்டங்களும் கடின சோதனைகளுமே*
*ஒருவனை மனிதனாகச் செய்கின்றன*

— காந்திஜீ

# இடமிருந்து வலம் : கல்லூரி அபிவிருத்திச் சங்க நிர்வாகசபை: 1994 - 1995



இருப்பவர்கள் : திரு. வ.இராசதுரை (இணைச்செயலாளர்), திரு. செ.இலகுநாதன், திரு. அ. நாகராஜா (இணைச்செயலாளர்), திரு. அ.நல்லதம்பி (நலன்விரும்பி), திருமதி. ஆ. சிவஞானசுந்தரம் (தலைவர்), சிவத்தமிழ்ச்செல்வி, செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி (நலன்விரும்பி), திருமதி சோ.கைலாசநாதன் (உப தலைவர்) திரு. க.கணேசரத்தினம், திரு.கா.சாந்திநாதன் (பொருளாளர்)

நிற்பவர்கள்: திருமதி வி.நரேந்திரா, செல்வி. செ.செல்வராஜா, திருமதி கு.அப்புத்துரை, திரு. சி.தம்பித்துரை, திரு. த.செல்வராஜா, திரு. த.பஞ்சநாதன், திரு. க.சின்னராஜா, திருமதி. ப.பத்மநாதன், திருமதி ஜ்.கணேசலிங்கம், திருமதி .தி.தர்மலிங்கம் திருமதி. ம.இராமசாமி.

## சொத்துக்கள் விபரம் பின்வருமாறு.

**1. தென்னிந்திய தமிழகத்தில்:**

தென் பழநியைச் சார்ந்த கோடைக் கானலிலும், இராமேஸ்வரப் பதியிலுமுள்ள மலை சார்ந்த நிலப் பகுதிச் சொத்துக்கள் — நிலப்பரப்பு 25 ஏக்கர்.

**2. யாழ்ப்பாணத்தில்:**

1. முன்னாள் பரமேஸ்வராக் கல்லூரியும், அதனைச் சார்ந்த நிலப்பரப்பு 25 ஏக்கரும்.
2. சுன்னாகம் இராமநாதன் கல்லூரியும் அது ஸ்தாபிக்கப்பட்ட நிலப்பரப்பு 25 ஏக்கரும்.
3. கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பின் பக்கலிலுள்ள தோட்டநிலம் 20 ஏக்கர்.
4. உடுவில் கிராம சபைக் கட்டிடத்தின் பக்கலிலுள்ள "கரவசிட்டி" என்ற காணி நிலப்பரப்பு 01 ஏக்கர்.

**3. கிளிநொச்சியில்:**

இராமநாதபுரம் பகுதியிலுள்ள நெல் வயல் 300 ஏக்கர்.

**4. தென்னிலங்கைப் பகுதியில்:**

1. கொழும்பிலுள்ள "வில்லா பிறாங்கா" என்ற பங்களா.
2. தென்பிருந்தாவனம் என்னும் தோட்டம் 147 ஏக்கர்.

மேற் கூறப்பட்ட சொத்துக்களின் விபரத்தை அறிந்தவர்கள் இராமநாத வள்ளலாரின் சைவ சமயப் பற்றை எளிதில் அறிந்து கொள்வார்கள் என நம்புகிறோம்.

# சேர். பொன். இராமநாதனும் கவின்கலைக் கல்வியும்

*கலாநிதி சபா. ஜெயராசா*
*தலைவர்,*
*இராமநாதன் நுண்கலைத்துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

சமூக ஒன்றிணைவின் உதிர்வில் கலைகளை வலுப்படுத்தும் கல்விச்செயல் முறையின் வாயிலான மேம்பாடு மிக்க அரண்களை நிறுவிய சைவசமய மறுமலர்ச்சிக் கால கட்டத்தின் குறியீடாகவும், பிரதிநிதியாகவும் விளங்கியவர் சேர். பொன். இராமநாதன். தமிழ்ப் பண்பாட்டின் வேர்களைத் தேடுதலும், தனித்துவத்தைப் புலப்படுத்தலும் மேலைப் பண்பாட்டு அழுத்தங்களின் மத்தியிலே தோன்றிய தேசியத் தேவைகளாக அமைந்தன.

சமயத்திலும், கல்வியிலும், கலைகளிலும் தேசிய உள்ளடக்கங்கள் நிறைந்திருந்தன. இவற்றுக்கு வலுவூட்டுதல் வாழ்க்கைக்கு வலுவூட்டுவதாகக் கருதப்பட்டது. ஆளுமையை உருவாக்க வேண்டிய கல்வி ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே அடிமைச் சின்னங்களைப் போற்றும் கல்வியாக மாற்றியமைக்கப்பட்டது. பாடசாலைகள் ''அந்நியப்படல்'' என்ற உள நிலையின் சின்னங்களாக மாறத் தொடங்கின.

பாரம்பரியமான கலைகளும், இலக்கியங்களும் வாய் மொழி வாயிலாகப் பாதுகாக்கப்பட்டும் கையளிக்கப்பட்டும் வந்த தொடர்ச்சியிலே புதிய பாடசாலைக் காட்டுருக்கள் 'தடைகளை' ஏற்படுத்தின. இந்த நடப்பியலை உள்வாங்கி, மாற்றீடான கல்வி நடவடிக்கைகளுக்கு உருவம் கொடுக்க முயன்ற வேளை, இராமநாதன் கல்லூரியின் கலைத் திட்டத்தை செழுமை கொண்ட கலைத் திட்டமாகக் (Enriched Curriculum) கட்டியெழுப்பும் பணி சேர். பொன். இராமநாதனால் மேற்கொள்ளப்பட்டது.

இலக்கியம், இசை, நடனம், ஓவியம், மலரலங்காரம், உள்ளக அலங்காரம், கோலம், ஆடையமைப்புக் கலை, குருகுலக் கோட்பாட்டை உள்ளடக்கிய வதிவிடக் கல்வி, உணவு அலங்காரம், போன்ற பல்வேறு அனுபவங்களைக் கொண்ட கலைத் திட்டச் செழுமையாக்கல் இராமநாதன் கல்லூரியிலே மேற்கொள்ளப்பட்டது. இந்த அனுபவங்களின் வழியாகப் பண்டைய கலைஞானம் உயிர்ப்புப் பெற்றது. பயன்கொள்நெறியையும் (Pragmatism) ஆதர்ஸ நடப்பியலையும் (Romantic realism) உள்ளடக்கிய கவின்கலைக் கல்வி பற்றிய கண்ணோட்டம் சேர். பொன். இராமநாதனிடத்துக் காணப்பட்டது.

மேலைப் புலக் கல்வி ஏற்பாடானது பண்பாட்டு வறட்டத்தைக் கொண்டிருந்தது. தேசிய பண்பாட்டுக் களஞ்சியத்துக்குரிய வாயில்கள் அதனால் திறக்கமுடியாதிருந்தது. சூழலோடு வாழ்க்கைச் செயலியக்கத்தை ஒன்றிணைக்க முடியாதிருந்தது. அழகியல் அனுபவங்களிலிருந்து கல்வி விடுபட்டு நின்றது. அனைத்து அறிவு வீச்சுக்களும் மேலைப் புலத்திலிருந்தே வரவேண்டும் என்ற மலைப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. கிராமிய வாழ்விலிருந்து படிப்பு ''விலகலை'' விளைவித்தது. தன்னல முனைப்புக்கு (Egotism) கல்வி தூபமிட்டது. இந்நிலையிற் ''கூட்டு'' மனப்பாங்கைத் தூண்டவும், பண்பாட்டில் ஆழ்ந்து வேர் பதிக்கவும், கவின்கலைகளின் தவிர்க்க முடியாமை உணரப்பட்டது. சமயத்தோடும் தத்துவத்தோடும் கவின் கலைகளின் ஒன்றிணைப்பு அவசியமெனப்

பட்டது. கவின் கலைகள் சமயத்தோடு இணையும் போது தனி மனிதரோடும் சமுகத்தோடும் இயல்பாகவே தொடர்பு கொண்டு நிற்கும் பலம் கொண்டதாக அமைந்தது.

பின்பற்றல் (Imitation) என்ற கல்விச் செயற்பாடுகள் சமூக மாற்றத்தினூடே பெண்களைப் பின்தங்க வைத்துவிடும். பெண்களின் கல்வி ஆக்க உந்தல் (Creation) மேம்பட்ட கல்வியாக வேண்டும். இவ்வாறு உந்தலைத் தூண்டும் விசைகள் கவின் கலைகளிலே உட்பொதிந்துள்ளன. பெண்களுக்குரிய ஆக்க உந்தல் விசை இராமநாதன் கல்லூரிக்குரிய கலைத் திட்டத்திலே ஒழுங்கமைக்கப்பட்டது. கவின் கலைகள் தன்னறிவைத் தூண்டும், அவற்றுடன் பத்தி நெறியும் இணைக்கப்பட்டது. பத்தியும் கவின் கலைத் தொழிற்பாடும் பிரிக்க முடியாதவை என்ற உணர்வு பெண்களுக்கு உணர்த்தப்பட்டது. அறிவின் வழியும் (ஞான மார்க்கம்), செயலின் வழியும் (கர்ம மார்க்கம்), பத்தியின் வழியும் ஒன்றிணைந்த அனுபவங்களாக மாணவிகளுக்குத் தரப்பட்டன.

மனவெழுச்சிச் செம்மைப்படுத்தலுக்கும், ஆளுமை வளர்ச்சிக்கும் இசைக் கல்வி துணை செய்கின்றது. இராக ஒழுங்கமைப்புக்கும் மனவெழுச்சி ஒழுங்கமைப்புக்குமிடையே தொடர்பு உண்டு. எமது பாரம்பரிய இசை என்பது ஒரு கலை வடிவம் மட்டுமல்ல ''அது ஒரு வாழ்க்கை'' (Music is life itself) என்ற கருத்து சேர். பொன். இராமநாதனிடத்து மேலோங்கியிருந்தது. பண் இசையும், கருநாடகஇசையும் தமிழர்பண்பாட்டில் முகிழ்த்தெழுந்த இரு வடிவங்களாகவுள்ளன. இராமநாதன் கல்லூரிக் கலைத்திட்டத்தின் வழியாக இருவித இசை அனுபவங்களும் மாணவிகளுக்கு வழங்கப்பட்டன.

பரத நாட்டியத்தில் உடல் அசைவுகள் கவிதையாக்கப்படுகின்றன. பரதநாட்டியம், உடையையும், உள்ளத்தையும் தெய்விக ஈடுபாட்டையும் ஒன்றிணைக்கின்றது. பரத நாட்டியக் கலை பற்றிய விரிந்த ஆழ்ந்த தெய்விக விளக்கம் ஆனந்தக் குமாரசுவாமியினால் (1877 — 1947) முன் வைக்கப்பட்டது. சிவதாண்டவம் பற்றிய அவரது நூல் பரதநாட்டியக் கலைக்கு உள்ளடக்க வலிமையைக் கொடுத்தது.

பரதநாட்டியத்தை ஆடுவோரது மேன்மைக்கும் பார்ப்போரின் உள்ளார்ந்த அழகுணர் மேன்மைக்கும் இடையே அறிவு பூர்வமான ஒத்திசைவை வளர்ப்பதற்கு ஆனந்தக்குமாரசுவாமியின் எழுத்தாக்கங்கள் தூண்டுதல்களைக் கொடுத்தன. நடன ஈடுபாடு தனித்துக் கலை ஈடுபாடாக, ''உபவேத''ப் பொருளாக மாற்றியமைக்கும் அழகியல்த் திறனாக ஆனந்தக்குமாரசுவாமியினால் ஆக்கப்பெற்றது. ''சேக்ஸ்பியரை இந்தியக் கலையனுபவங்களினூடாக விளங்கிக் கொள்ள வேண்டும்'' என்று ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் முன்வைத்த கருத்து இராமநாதன் கல்லூரியின் கலைத்திட்ட ஆக்கத்தின் மீது செல்வாக்குச் செலுத்தியது. சேக்ஸ்பியரையும் எமது பாரம்பரியக் கலையையும் ஒன்றிணைத்துக் கற்க வேண்டும் என்ற அணுகு முறைக்குத் தூண்டுதல் தரப்பட்டது.

பாரம்பரியமான ரசக் கோட்பாட்டின் வழியாக எமது தொல்சீர் கலைகளை அணுகுவதற்குரிய கல்விச் செயற்பாடுகள் சேர். பொன். இராமநாதனால் மேற்கொள்ளப்பெற்றன. ''ரசத்தையும்'' ''நிரசத்தையும்'' வேறுபடுத்தல், ரசத்தின் வலிமையையும் விசையையும் விளங்குதல், ரசவேறுபாடுகளைக் கல்வி அனுபவமாக்குதல், ரசத்தின் வழியாக அழகை அனுபவித்தல், வாழ்க்கையின் சாராம்சமான பற்றுக்களை வளர்த்துக் கொள்ளல், ரசத்தைத் தீர்மானிக்கும் பாவங்கள், அனுபவங்கள், விபாவங்கள் முதலியவற்றைப் பகுத்தறிதல் முதலிய பயிற்சிகள் மாணவிகளுக்குந் தரப்பட்டன. அதாவது கலைச்சுவை என்பது அறிகைத் தொழிற்பாட்டோடு இணைந்ததாக வளர்க்கப்பட்டது.

மனதில் ஆழ்ந்து படிந்த படிமங்கள் நடனங்களின் வழியாக வெளிப்படுகின்றன. அகவயமான உணர்வுகள் நடனத்திற்

புறவயமான குறியீடுகளாக்கப்படுகின்றன. உள்ளத்தின் முதிர்ச்சி பெற்ற கிளர்கலை வடிவங்கள் நடனத்தில் வெளிவருகின்றன. உள்ளத்திலே கிளர்ந்து கொண்டிருக்கும் கலையாக்க உந்தல்கள் '' கலை மிளிரிகள் '' என்று குறிப்பிடப்படும். மனத்தின் வெளிப்பாடக மட்டும் அவை விளங்காது, அனுபவங்களின் செறிவாகவும், கருத்துக்களின் தெளிவாகவும் விளங்கும். பல அனுபவங்களை இணைத்து ஒருமைப் படுத்தலும், ஓர் அனுபவத்தைப் பன்மை வெளிப்பாடு ஆக்கலும் பரதநாட்டியத்திலே மேற்கொள்ளப்படுகின்றன.

பிரபஞ்சத்தின் அசைவும் சுற்றுகையும் நடராஜ தாண்டவத்தினாற் சுட்டிக் காட்டப்படுகின்றது என்ற கருத்தியல் ஆய்வறிவாளர் மட்டத்திலே விதந்துரைக்கப்பட்டகாலப்பகுதியில் பரதநாட்டியத்தின் சமூக அந்தஸ்து மேலோங்கத் தொடங்கியது.

சேர். பொன். இராமநாதன் கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி முதலியோர் ''கலை கலைக்காக '' என்ற கருத்தைக் கொண்டிருக்கவில்லை. கலை என்பது இறையன்பு வெளிப்பாட்டுக்குரிய சாதனம் என்ற கருத்து அவர்களிடம் நிலைபேறு கொண்டிருந்தது, இந்துக் கோவில்கள் கலைகளைக் கையளிக்கும் நிலையங்களாக இயங்கின. பாடசாலைக்கும், கோவிலுக்குமிடையே பல ஒப்புமைகளை சேர். பொன். இராமநாதன் கண்டார். அறிவு, திறன், உளப்பாங்கு ஆகியவை இந்த இரு சமூக நிறுவனங்களாலும் பாதுகாக்கவும், வளர்க்கவும், பரப்பவும்படலாயின. மனிதரைவளமாக்கும் நிலையங்களாகவும் அவை தொழிற்படல் வேண்டுமென்று அவர் திட்டமிட்டார்.

கவின் கலைகள் அகத்தையும் புறத்தையும் ஒன்றிணைக்கின்றன. வாழ்வையும் செயற்பாடுகளையும் ஒன்றிணைக்கின்றன. உலகியலையும், இறையியலையும் ஒன்றிணைக்கின்றன. பிரச்சனைகளிலிருந்து ஒதுங்குவதற்கு கலைகள் உருவாக்கப்படவில்லை. பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் வகையில் அவைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

வேறு பாடத் துறைகளில் இருந்து பெற முடியாத அனுபவங்களைக் கவின் கலைகள் வழியாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்று சேர். பொன். இராமநாதன் கருதினார். கவின் கலைகள் '' வழிவகைகளை '' உருவாக்கும் சாதனங்களாக இருக்குமேயன்றி முடிந்த முடிபுகளாக இருக்கமாட்டா. கவின் கலைகள் செயல்களாக மட்டும் அமைவதில்லை அறிவுக் கருவூலங்களாகவும் விளங்குகின்றன. கவின் கலைகளினூடாக நல்லொழுக்கமும் கட்டுப்பாடுகளும் வலியுறுத்தப்படுகின்றன. வெறுமனே '' கண்டு களிக்கும் '' வடிவங்கள் என்ற இயல்பையும் கடந்து உள்ளத்திலே ஆழ்ந்த சிந்தனைகளையும், மேம்பாடுகளையும் அவை தூண்டிவிடுகின்றன.

கலைகள் அனைத்தும் பாரம்பரியங்களிலிருந்து முகிழ்ந்தெழுகின்றன. பாரம்பரியங்களைத் கட்டிக்காக்கும் கல்விச் செயல்முறைகளை வலுப்படுத்த முயன்ற சேர். பொன். இராமநாதன் அவர்கள் கவின் கலைகளைப் பெண்களுக்குக் கற்பிப்பதில் கருத்தூன்றியிருந்தார். கவின் கலைகளை வலிந்தும் திணித்தும் கற்பித்தல் வேண்டுமென்று அவர் விரும்பவில்லை.

இயல்பான கல்விச் சூழலில் இங்கிதமாக அவற்றைக் கற்க வேண்டுமென்பதே அவர் வகுத்த ஒழுங்கமைப்பாக இருந்தது. அவர் காலத்து ஆங்கில நாட்டுக் கல்வியும் இந்தியக் கல்வியும் இலக்கியம், இசை, நடனம், ஓவியம், சிற்பம் போன்ற துறைகள், மீது கூடிய கவன ஈர்ப்பைக் கொண்டிருந்தன. கவியரசர் இரவீந்திரநாத்தாகூர் தமது கலைத் திட்டத்திற் கவின் கலைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார். அழகிய இயற்கைச் சூழலில் அதிகாலையில் கிராமிய இசைகள் எழுப்பப்படுகின்ற விவசாயிகளின் தொழில்சார் நடவடிக்கையின் பின்புலத்தில் சேர். பொன். இராமநாதன் கல்லூரியை நிறுவினார். தோட்டத்திலே துலா இறைப்பு மிகுந்திருந்த காலப்பகுதியில் அதிகாலையில் இராமநாதன் கல்லூரிச் சூழலில் கிராமியப் பாடல்கள் ஒலித்தன. விவசாயத்தோடு

இணைந்திருந்தகிராமிய இசைவடிவங்களும் பாடல்களும் பின்னர் சினிமாவின் வருகையோடு யாழ்ப்பாணத்தில் நலிவுறத் தொடங்கின.

தமிழ் மக்களின் பாரம்பரியத்திற் கவின் கலைகள் இரண்டு செயலாற்றுகைகளைப் புரிந்தன. ஒன்று — மகிழ்ச்சியூட்டல் — மற்றையது அறிவூட்டல். அக்காலத்தைய யாழ்ப்பாணச் சூழலைக் கருத்திற் கொண்டு நடனக்கலையிலும் பார்க்க இசைக் கலையின் வாயிலாகவே கல்வி இலக்குகளைக் கூடுதலாக வென்றெடுக்க முடியும் என்று அவர் கருதினார்.

தெய்விகத்திலிருந்துபிரிந்ததனியாட்சிக் கலைகள் என்று எதுவுமே இல்லை என்பது அவரது கருத்து. இதே கருத்து கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமியிடத்தும் ஆழ்ந்து வேரூன்றியிருந்தது. தெய்விகத்திலிருந்து விடுபடும் தனியாட்சிக் கல்வி ஒன்றில்லை என்றவாறு இக்கருத்தை சேர். பொன். இராமநாதன் மேலும் விரிவுபடுத்தினார்.

வாழ்க்கையூடாகக் கவின் கலைகளை நோக்குதலும், கவின் கலைகளூடாக வாழ்க்கையை நோக்குதலும் அவரது அணுகுமுறைகளாக அமைந்தன. இராமநாதன் கல்லூரியின் கட்டட அமைப்பு, வகுப்பறை அமைப்பு, மண்டபம், நூலகம், விடுதி என்பவற்றின் அமைப்புக்கள், மரத்தளபாடங்கள் என்பவற்றின் வடிவமைப்புக்கள் (சில தளபாடங்கள்யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலகச் சேமிப்பில் உள்ளன) பித்தளைப் பாத்திரங்களின் வடிவமைப்புக்கள் முதலியவற்றில் அழகியல் உணர்வு மேலோங்கியிருந்தமையைக் காணலாம். கட்டடக் கலையில் அழகும் பயனும் ஒன்றிணைக்கப்பட்டிருந்தன. வெப்பத்தைத் தெறிக்கக்கூடியவாறும், உறிஞ்சக்கூடியவாறும் சுவர்களும் விதானங்களும் அமைக்கப்பட்டன. பிரதான மண்டபத்தில் சரஸ்வதி, இலக்குமி பிரதிமைகள் (சாந்தமான முகச் சித்திரிப்புடன்) வடிவமைக்கப்பட்டன.

பரதருடைய ரசக் கோட்பாட்டினை அவரைப் பின்பற்றியோர் வேறு வேறு விளக்கங்களுக்கு உட்படுத்தினர். சேர். பொன். இராமநாதன் கண்ட ரசக்கோட்பாடு அவர் வாழ்ந்த காலச் சமூகப் பரிமாணங்களுடன் இணைந்ததாக அமைந்தது. தம் காலத்தில் எழுச்சி பெற்ற இந்து மறுமலர்ச்சி இயக்கங்கள், யாழ்ப்பாணத்தில் நிலைபேறு கொண்டிருந்த சமூகமரபுகள், சைவ சித்தாந்தப் பின்புலம் என்பவற்றின் அடிப்படையில் கவின் கலைகளுக்குரிய அணுகு முறைகளை அவர் கட்டியெழுப்பினார். மேலைத் தேயக் கலை இலக்கியச் சிறப்புக்களை நிராகரித்து விடாது உள்வாங்கிய சமநிலை நோக்கையும் அவரிடத்தே காணக்கூடியதாகவுள்ளது.

பெண்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்குரிய '' விருத்தி '' நோக்கிலும், ஆன்மீகப் படுத்தல் என்ற '' தெய்விக '' நோக்கிலும் சேர். பொன். இராமநாதன் கவின்கலைகளை அணுகினார். அவரது இலக்குகளை மேலும் ஆழமாக்கி திரு. சு. நடேசன் அவர்கள் இராமநாதன் இசை நிறுவனத்தை அமைத்தார். இந்நிறுவனம் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் பொறுப்பேற்கப்பெற்றது.

## References :

1. **Ananda K. Kumaraswamy,**
The Dance of Siva
Sagar Publiscations
New Delhi 1964.

2. **Sneb Pandit,**
An Approach to the Indian Theory of Art and Aesthetics
Sterling Publishers PVT Ltd.
New Delhi 1977.

3. **M. Vythilngam,**
The Life of Sir Ponnampalm Ramanathan
Ramanathan commemoration Society
Colombo — 1971.

4. **V. Muthucumaraswamy,**
Founders of Modern Ceylon Vol. I
Uma Siva Pathippakam
Jaffna 1973.

*எப்படியோ ஒரு வழியில் கடவுள் நமக்கு உதவி புரிய வருகிறார். நம்பிக்கையை இழந்து விட வேண்டாம் என்றும், நாம் அழைக்கும் போதெல்லாம் தாம்வரத் தயாராக இருப்பதாகவும், ஆனால் நம் நிபந்தனைகளின்படியின்றி தம் நிபந்தனைகளின்படி வருவதாகவும் அவர் நமக்கு உணர்த்துகிறார். இது நான் கண்ட உண்மை. ஒரு தடவை கூட கடைசி நேரத்தில் அவர் என்னைக் கைவிட்டது கிடையாது.*

— **காந்தி**

கல்விக் கண் திறந்த

கனவானின் கனவுகள் நனவாக்க

முயல்வோரை

## வாழ்த்துகிறோம்



★ பட்டுப் புடைவைகள்

★ கைத்தறி ஆடைகள்

★ நவநாகரிகத்திற்கேற்ற சேலை வகைகள்

ஏனையவையை பெற்றுக்கொள்ள

# அம்பாள் வண்ணச்சோலை

11, நவீன அங்காடி, சுன்னாகம்.



மகத்தான பணிபுரிந்த

மகானின் மலர் சிறக்க

## வாழ்த்துகிறோம்

# மகராசி ரெக்ஸ்

சுன்னாகம் சந்தி, சுன்னாகம்.

பல்துறை விற்பன்னனின்

பான்மை சாற்றும்


பண்புடை மலரை

பணிவுடன்

வாழ்த்துகிறோம்

# சுந்தரம் அன் சன்ஸ்

பல்பொருட் களஞ்சியம்



காங்கேசன் துறை நெடுஞ்சாலை, சுன்னாகம்.

இராமநாதனின் நாமம்

என்றும் மிளிர

நாமும்

வாழ்த்துகிறோம்

# நாதன் சகோதரர்

33, காங்கேசன்துறை நெடுஞ்சாலை. சுன்னாகம்.

# உழவர் களஞ்சியம்

உத்தமனின் பணி

நிலைக்க

உளமார

வாழ்த்துகிறோம்

காங்கேசன் துறை நெடுஞ்சாலை, சுன்னாகம்.



# சித்திரகலா ஸ்ருடியோ

சிவநெறி நின்ற சீராளன்

சிலைச் சிறப்புமலரை

சிந்தை நிறைய

**வாழ்த்துகிறோம்**

இல. 68, காங்கேசன்துறை நெடுஞ்சாலை, சுன்னாகம்.



# குளிர் அருவி

கடமை வீரனின் கம்பீரச் சிலையமைப்பை

கனிவுடன்

**வாழ்த்துகிறோம்**

70, காங்கேசன்துறை நெடுஞ்சாலை, சுன்னாகம்.

# சேர். பொன். இராமநாத வள்ளலின் சமயப் பணி

**நம. சிவப்பிரகாசம் அவர்கள்**
இந்துசாதனப் பத்திராதிபர்

**'தனக்கென வாழாத் தகைசால் சாது அனைத்தும் அறமே நினைப்பும் நிகழ்ச்சியும்'**

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று எழில் நெறி காட்டினார் உழவாரத் தொண்டன் திருநாவுக்கரசன். இந்த நாட்டில் சைவசித்தாந்தம் கைவரப் பெற்ற நெடுங்கொடி ஒன்று உண்டு. சிந்தனைக்குரிய செழுங்கதிர்ச் செல்வமாய் விளங்கிய நல்லை நகர் ஆறுமுகநாவலர் தொடக்கிய தொண்டினைத் தொடர்ந்துகொண்டு வாழ்ந்தவர்களில் உன்னதமான நன்னெறியாளர் சேர். பொன். இராமநாதன் அவர்கள். ஆங்கிலேயரின் ஆட்சி இந்த நாட்டில் ஆரம்பமாகி விரிந்து வரும் காலத்தில் பெருந்தொண்டாற்றியவர்கள் இந்த இருசுடர்கள் நாவலரும், சேர். பொன். இராமநாதன் அவர்களும்.


சமயப்பணி சிறப்புற அமையவேண்டுமே யானால் ''அறஞ் செய விரும்பு'' என்ற அரும் மொழியின் கரும்பனைய பொருளை உணர்ந்து, உகந்து வாழ்வில் அமைத்துக் கொள்ள வேண்டும். மருதனார் மடத்தில் ஒருதனி வளாகம் இருப்பதற்கு மூலகாரணமாக இருந்தவர் பொன்னம்பலமுதலியார் பெற்றெடுத்த நற்றவச் சீலன், நாவலர் பணி நாடெங்கும் பரந்து எங்கள் சமயக் காவல் அரணாக விளங்குவதற்குக் காரண கர்த்தா அன்னாருக்குப் பின்தோன்றிய புகழோடு தோன்றியவன்பொன்னம்பலவன் இராமநாதன். ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்பதை மக்களுக்கு நடைமுறையில் எடுத்துக் காட்டச் சிவாலயங்கள் எழுப்பிய சைவசீலன் இராமநாதன். கொழும்பு மாநகரில் கொச்சிக்கடையில் ஒரு சிவாலயம் எழுந்தது. தன்னுடைய மூதாதையர் தொடக்கிய அறக்கட்டளையைத் தொடர்ந்து அங்கே சமய எழுச்சி, உணர்ச்சி, அதிர்ச்சி எழ வைத்தவர் சேர். பொன். இராமநாதன். இவ்வாறு ஈழத்தின் வெவ்வேறு இடங்களிலும் தென்னிந்தியாவிலும் அமைத்தார் என்று பார்க்கும் போது சமயப்பணி எங்கே அமைந்தது என்பது வெள்ளிடை மலை போலத்தோன்றும். காடாய்க் கிடந்த பரந்தன் கிளிநொச்சியை நாடாக விளங்க வைத்து உணவுக்கு நெல் உறுதுணையாவதுடன் அங்கே ஆலயங்களும் எழுந்தன. கொடைக்கானலில்குளிர்ந்த மலைப்பகுதியில் ஒரு சிவாலயம் எழுந்ததென்றால் எங்கெல்லாம் எங்கள் வள்ளலின் சமயப்பணி பரந்தது என்பது சொல்லாமல் விளங்கும். கோயிலுங் குளமும் மேய வளத்துடன் ஆய கலைகள் கற்று, அரும் பொருள் அறிந்து, பரம் பரம் சோதி பரனே போற்றி என்று வாழ்நாள் முழுவதும் இறைவணக்கம் செய்யக் கூடிய நிறைநெறி பயிற்றும் கல்லூரிகள் எழுந்தன. இராமநாதவள்ளலின் கைவண்ணமாக தென்னிலங்கையிலே திகழும் கொழும்பு மாநகரில் ஒரு மகளிர் கல்லூரி தொடக்கலாம் என்ற கருத்தை ஏனையோர் இவருக்கு எடுத்துரைத்தும் வள்ளலார் உண்மையான சமயப்பணி யாழ்ப்பாண நாட்டிலேயே துலங்கவேண்டும் என்று பனைக்குடா நாட்டின் நாப்பண் மருதனார்மடம் என்ற மகுடத்துடன் விரிந்த பரப்பு, பரந்த மண்ணிலே இராமநாதன் கல்லூரி உருவானது சமயப் பணியில் அமைந்த சிகரமென்று சிறப்பாகக் கூறலாம். பிறநாட்டார் மொழியும் அவர்களின் மதமும் புகுந்து, எங்கள் மரபுப் பழக்கவழக்கங்களைப் புறங்காண வைக்கின்ற பொல்லாங்கு தலையெடுக்கின்ற காலத்திற்றான் இராமநாதன் கல்லூரி உதயமானது. ஆங்காங்கு சைவ

மரபில் சார்புற்றோர் தங்கள் புத்திரிகளை அங்கே கல்விகற்க அனுப்பினர். உடை, நடை, பாவனை எல்லாம் பழைய மரபுக் குரியனவாக விளங்கின. கல்லூரியில் இவர் களைக் காணும் போது தேவகன்னிகைகள் நடமாடுகின்றனரோ என எண்ணவைக்கும் காட்சி யாவருக்கும் தெள்ளிதிற் புலனாகும். காலையிற் கதிரவன் கண்விழிக்கு முன் னெழுந்து காலைக்கடன் கழித்துக் கைகூப்பி வணங்கி, போற்றி போற்றி சய சய போற்றி என்றும், ''நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க'' என்றும் மென்குரலில் எழுப்பும் இன்னிசை எழுந்து தென்றலோடு கலந்து பன்னெடுங்காதவழி சென்று கின்னரர் தும்புரு நாரதர் அவர்களின் இசையைப் போன்று இன்பம் பரப்புவது. சமயப் பணி யின் ஊற்றுக்கண் இங்கேதான் என்று சுருக்க மாகச் சொல்லிவிடலாம். கல்லூரிகளின் மாணாக்கர்கள் சுந்தரமாவது நீறு என்று வெண்ணீறு அணிந்து திலகமிட்டுப் பாடங் களைக் கற்கத் தொடங்கும் பழக்கம் கட்டாயமாகிவிட்டது. இந்த இடத்திலே இன்னொன்றையும் இணைத்துப் பார்ப் போம்.

இக்கழகம் ஆரம்பமாகி ஒன்பது ஆண்டு களின் பின்னர் இன்னொரு சமயப்பணி நாடும் நகரமும் கூடும் திருநெல்வேலியில் ஆரம்பமானது, மருதனார்மடம் போன்று ஆங்கும் நிலப்பரப்பு மிகுந்த மண்வளத்திலே பரமேஸ்வரக் கல்லூரி எழுந்தது. வானந் தொடு கோபுரங்கள், தேனுந்து மாமரங்கள், ஆன ''பரமேஸ்வர ஆனந்தம்'' என்று மாணாக்கர்கள் தங்கள் அறிவுக்கு எட்டிய வாறு பாட்டிசைப்பார்கள். சமயப்பணியின் விரிவு இங்கே தான் என்று சொன்னால் அது உண்மையான கூற்றாகும். இன்று அங்கே ஈழத்துக்கு வாழும்நெறியைக் கூறு கின்ற ஒரு பல்கலைக்கழகமாக ஒல்காப் புகழொடு ஓங்கி நிற்கிறது. எங்கள் நாட்டுக் கலாநிதிகள், உபவேந்தர்களாகவும், பேரா சிரியாகளாகவும், விரிவுரையாளர்களாக வும் கடமையாற்ற மாணாக்கர்கள் பழைய நெறிகளைப் பேணி நிற்பர்.

பரமேஸ்வரக் கல்லூரி ஆரம்பமான போது அங்கே யானும் மாணாக்கர்களுள் ஒருவனாக இருந்து வழி நடாத்தும் சிரேஷ்ட னாகப் பணிபுரிந்தேன். ஒவ்வொரு வகுப் பிலும் திருநீறும், திலகமும் வழங்கப் பெறும். ஆசிரியர்கள் தலைப்பாகை அணிந்து கம்பீரமாக வருவார்கள். பார்ப் பதற்கு மகிழ்ச்சியாக இருக்கும். சேர். பொன். இராமநாதன் சமயப்பணி புரிந் தார் என்றால் நாம் இவற்றை எல்லாம் எடுத்து ஆராய்ந்து நுணுக்கமாகப் பொருளை அறிந்து கொள்ள வேண்டும். இந்தத் தொடரில் இராமநாத வள்ளலார் இன்னமும் உறுதுணை வழிகளைத் தோற்று வித்தார். பரந்தன், கிளிநொச்சிப் பண் ணையில் விளையும் நெல் கல்லூரிகளுக் கெல்லாம் மூலாதாரமாக என்றும் உயிர் கொடுக்க உதவியது.

தொடக்கத்திலே பரமேஸ்வரக் கல்லூரி யில் மேல் மாடியில் நடராஜரது திருவு ருவம் வைத்து வணங்கப் பெற்றது. இப் பொழுது பார்வதி பரமேஸ்வர ஆலயமாகப் பிரதிட்டை செய்யப்பட்டு மகாகும்பா பிடேகம் நடாத்தி சமயப்பணி என்ற கொடியைச் வைச வானில் ஏற்றி வைத் தனர் யாழ் பல்கலைக் கழகமும், பரமேஸ் வரக் கல்லூரி இயக்குனரும். தில்லைச் சிதம்பரத்திலேயுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. அந்த உணர்ச்சியே திரு நெல்வேலியிலும் உருவாகி அவர்தம் சமயப் புகழ் பாடாநிற்கின்றது. எந்தை நமச்சி வாயப் புலவர் ''ஊர் பெயர் உட்பெயர் விளக்கம்'' ஆசிரியர் எமக்கு சிவப்பிரகாசம் என்று பெயரிட்ட அருமைதான் என்னை! நவசிவ என்று விளங்கவும், அதை இறை ஒளி என்று செந்தமிழில் வழங்கவும்; எமக்குச் சமயப் பணியைப் பற்றி அறிந்து உரைக்கவும் உறுதுணையாகின. விசுவாவசு ஆண்டு பங்குனித் திங்கள் ஏழாம் நாள் (20 - 03 - 1906) தொடக்கம் இற்றைவரை உள்ள காலத்திலே சைவசீலமே ஞாலத்தின் நல்வாழ்வுக்குரியது என்று உணர்ந்து கொண் டிருக்கின்றேன். சமயப் பணியில் அமைய அவதாரம் செய்த பொன். இராமநாதன் என்னும் இமயத்தை நோக்கி வணக்கம் செய்வோமாக.



# சகிதா



## ஜுவலேர்ஸ்

**வாழ்த்துச் செய்தி**

சகல சொத்துக்களையும்
*சர்வேஸ்வரன் சொத்தாக்கிய*
**சான்றோன் பணி பரிணமிக்க**
*அன்புடன்*
**வாழ்த்துகிறோம்**

காங்கேசன்துறை நெடுஞ்சாலை, சுன்னாகம்.

---

# பிறின்ஸ்





## ஸ்ருடியோ

**வாழ்த்து**

அடையாள அட்டைப் புகைப்படங்களுக்கு
*அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்*
**நிலையற்ற செல்வத்தை நிலையான கல்விக்காக்கி**
*என்றும் நிலைத்து நிற்கும்*
வள்ளல் கருணையை நன்றியோடு
**வாழ்த்துகிறோம்**

காங்கேசன்துறை நெடுஞ்சாலை, சுன்னாகம்.

## நீரஜா அச்சகம்



செம்மல் செந்தண்மை

என்றும்

செந்தமிழ் நாட்டில்

நிலைபெற

**வாழ்த்துகிறோம்**

காங்கேசன்துறை நெடுஞ்சாலை, சுன்னாகம்.



# மெக்கானோ

## தட்டெழுத்து

**வாழ்த்து**

மேன்மை கொள் சைவ நீதி

உலகெல்லாம் விளங்க

உழைத்த உத்தமன் புகழ்

ஓங்குக

காங்கேசன்துறை நெடுஞ்சாலை, சுன்னாகம்.

சீரிய சிந்தனைச் செம்மலின்

சிலைமலர் சிறப்புற

சிவனருள் வேண்டி

வாழ்த்துகிறோம்

'சிந்து மருந்தகம்'

116, காங்கேசன்துறை நெடுஞ்சாலை,

சுன்னாகம்.



# செல்வம் ஆட்ஸ்

றபசீல், விளம்பரபோட், நம்பர் பிளேம், பிளாஸ்ரிக் போட்,
லேபிள் டிசைன், சினிமா சிலைட், பாடசாலை பச்,
புளொக் மேக்கிங், திறப்புக் கோர்வைச் சின்னங்கள்,
புளொக் டிசைன், திரைச்சீலை

அனைத்தும் செய்து கொள்ள

**செல்வம் ஆட்ஸ்**

சுன்னாகம்

# ஒளிர் வெள்ளி

## விற்பனை நிலையம்

**சைவத் தமிழ்ப் பெண்கள்**
வாழ்விற்கு ஒளியூட்டிய
ஒப்பற்ற தலைவனின்
சிறப்புமலர் சீர்பெற

**வாழ்த்துகிறோம்**

105, காங்கேசன்துறை நெடுஞ்சாலை. **சுன்னாகம்.**

# இராமநாதனின் செந்தமிழ் இலக்கணம்

**பேராசிரியர் முனைவர் அ. சண்முகதாஸ்**
தலைவர்,
தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

சேர். பொன். இராமநாதன் எழுதிய **செந்தமிழ் இலக்கணம்** என்னும் நூல்பற்றி யாரும் பெரிதாக எதுவும் பேசுவதில்லை. நாவலருடைய **இலக்கணச் சுருக்கம்** நன்னூலார் கூறிய இலக்கணங்களை ஓரளவு சுருக்கித்தருகின்றது ஆனால், **செந்தமிழ் இலக்கணமோ** நன்னூலாருடைய எழுத்ததிகார, சொல்லதிகாரச் சூத்திரங்களிலே கூறப்பட்டனவற்றையும் உரைகளிலே கூறப்பட்டனவற்றையும் விளக்கிக் கூறுகின்றது. ஐநூறுக்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட இவ்விலக்கண நூல் சென்னை அடிஸன் அச்சுக் கூடத்திலே அச்சிடப் பெற்று 1927 ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது. இந்நூல் ஏன் எழுதப்பட்டது என்பதற்கு நூலாசிரியர் பொருத்தமான விளக்கம் தருகிறார் :

> ''தமிழ் கற்கும் மாணவர்கள் தமிழ் இலக்கண நூல்களைக் கல்லாது கைவிடுவதற்குக் காரணம் அவற்றின் கடின சொல்நடையே என்று யாரும் அறிவர். இவ்வருத்தத்தை முற்றிலும் நீக்கி, இலக்கண விதிகளின் இன்றியமையாச் சிறப்புக்களைத் தெளிவாக விளக்கும் பொருட்டு, இந்நூல் இயற்றப் பெற்றது.''

காலத்தினுடைய தேவையை அறிந்து ஆற்றும் பணியே சிறப்பானதாகும். இவ்விலக்கண நூற்பணியும் அத்தகைய நல்ல எண்ணத்துடனேயே நடைபெற்றது. எனினும் இவ்விலக்கண நூலிலே கையாளப் பட்டுள்ள நடை எளிமையான நடையென்று முற்றாகக் கூறிவிடவும் முடியாதுள்ளது. ஒப்பீட்டு அடிப்படையிலே, தமிழ் இலக்கணம் படிக்கும் மாணாக்கரை எண்ணத்திற்கொண்டு ஓரளவு எளிமையான நடையிலே எழுதப்பட்டுள்ளது என்று கூறலாம்.

இந்நூலுக்கு மூன்று பெரியார்களுடைய அணிந்துரைகள் அணி செய்கின்றன.

**'கயப்பமைந்த மருந்தெனநன் னூலினைமா**
**ணாக்கரெலாம் கற்ற னீங்கி**
**மயக்குடைய ராய்த்திரிந்த வகைகண்டு**
**சருக்கரைக்குண் மருந்தீத் தாங்கு**
**நயப்புறுநல் லுரையிடைநன் னூல்பொதிந்தவ்**
**வுலகுண்ண நல்கிக் காத்தான்**
**வியப்புறுநுண் மதிநிதியான் வேள்ராம**
**நாதனென்னும் வேந்தர் வேந்தே'**

என்று பரமேஸ்வரக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் க. சு. நவநீதகிருஷ்ண பாரதியார் பாடுகின்றார். இரண்டாவது அணிந்துரை வழங்கிய இராமநாதன் கல்லூரித் தமிழ்ப் பண்டிதராகிய ச. பொன்னம்பலபிள்ளை,

> ''எழுத்துஞ் சொல்லுமா மிரண்டதி காரத்தடங்கிய விலக்கண வமைதிகள் தெரித்துத் தமிழகத்தார்கள் தனிநாற் பொருளை யிலகுவி லறியவு மெழுதவும் பேசவுந் துணையென நன்னூற் சூத்திரந் தழுவி மேற்கோ ளுதாரணம் விரிவுரை யாதியின் பொற்புற நன்கு புதுக்கி விளக்கி ......''

என்று சாற்றுகின்றார்.

கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலைத் தமிழ்ப் போதனாசிரியர் ம. வே. மகாலிங்கசிவம் அவர்கள் மூன்றாவது அணிந்துரையை வழங்கியுள்ளார்.

''துரைராம நாதனருள்
தோய்தருபல் லிலக்கணநூற்
பொருளாய்ந்து முறைவகுத்துப்
பொருளெல்லாம் பகல் செய்தே
அரியதமிழ் மொழித்தொன்மை
யதிசயிப்ப நனிவிளக்கி
உரைநடையா னிலக்கணமிவ்
வுலகுவப்ப அருளினனே''

இவ்வாறு கவிஞர் மகாலிங்கசிவம் செந்தமிழ் இலக்கணம் நூல் ஆசிரியரைப் பாராட்டுகிறார். இவ்வாறு பாராட்டுப்பெற்ற இவ்விலக்கண நூல் பற்றிப் பிற்கால அறிஞர்கள் ஏன் சிறப்பித்துப் பேசியதில்லை என யான் எண்ணியதுண்டு.

செந்தமிழ் இலக்கண ஆசிரியர் மரபுவழியான இலக்கண விளக்கத்தின் ஒளியிலே தமிழ் மொழியின் ஒலி அமைப்பினையும் அதன் வரிவடிவத்தையும் புதுமையான போக்கிலே நோக்குகின்றார். தமிழ்மொழிக்குரிய ஒலிவடிவங்கள் 399 ஆக இருப்பினும் அவற்றுக்குரிய வரிவடிவங்கள் 247 மாத்திரமே என்னும் கருத்தினை முன்வைக்கும் ஆசிரியர்,

> ''தமிழ் இலக்கணக் கர்த்தாக்கள் மேற்கண்டபடி 152 ஒலிவடிவங்களுக்கு வரிவடிவங்கள் இல்லையென்றார்கள், ஆயினும், தமிழர் பேசிவரும் பேச்சில் இன்னும் பல ஒலிவடிவங்களுக்கு வரிவடிவங்கள் இல்லையென்பது நிச்சயம். நகை, பகை, தங்கம், மங்கை என்ற பதங்களிலுள்ள க (ka) வரிவடிவம் ha, ga என்றஒலிவடிவங்களையும்குறிக்கும்''

என்று கூறிச் செல்கிறார். க, ச, த, ப ஆகிய வரிவடிவங்கள் முறையே ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிவடிவங்களைக் குறித்து நிற்கும் பாங்கினைச் செந்தமிழ் இலக்கணம் ஆசிரியர் எடுத்துக் கூறியுள்ளமை அவருக்கு ஒலியியல் தொடர்பான சிறந்த சிந்தனை இருந்துள்ளது என்பதை உணரவைக்கின்றது.

சுட்டெழுத்துத் தொடர்பாக ஆசிரியர் ஒரு புதிய கருத்தினை முன்வைக்கிறார். இது பொருத்தமான கருத்தோ என்பது ஆராயற்பாலது. தமிழிலுள்ள அ, இ, உ என்னும் மூன்று சுட்டெழுத்துக்களுள் இ பேசுபவருக்கு அருகில் உள்ளதைச் சுட்டவும், உ கேட்பவருக்கு அருகிலுள்ளதைச் சுட்டவும், அ இருவருக்குமே தூரத்திலுள்ளதைச் சுட்டவும் பயன்படுவதை துருக்கிய மொழியிலும் தமிழ்மொழியிலும் காணலாம். ஆனால், செந்தமிழ் இலக்கணம் ஆசிரியர் ''அந்த என்பது தூரத்திலுள்ள பொருளையும், இந்த என்பது சமீபத்திலுள்ள பொருளையும், உந்த என்பது பின்புறத்திலுள்ள பொருளையும் குறிக்குமென்று நன்கு விளங்குகின்றது'' என்று கூறுகிறார். உகரச்சுட்டு பின்புறத்திலுள்ள பொருளைச் சுட்டுமென்றால், யாருடைய பின்புறம் என்னும் வினா எழுகின்றது. பேசுபவருடைய பின்புறமா அல்லது கேட்பவருடைய பின்புறமா? எனவே உகரச் சுட்டுப்பற்றிய இந்த விளக்கம் பொருத்தமாகத் தென்படவில்லை.

செந்தமிழ் இலக்கணம் ஆசிரியர் புதுமையான எண்ணங்களுடையவராயுள்ளார் என்பதற்கு நூலிலே பலசான்றுகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஒன்றைத் தருகிறேன். மங்கலமொழி பற்றிக் கூற வந்த ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

> ''சிலவித்வான்கள்செத்தார்,இறந்தார், சுடுகாடு, ஓலை என்பன அமங்கலச் சொல்லென்றும், இவற்றிற்கு மங்கலச் சொற்கள் துஞ்சினார், சிவபதமடைதார், நன்காடு, திருமுகம், என்றும் கூறுவர். ஆனால், திருவாசகத்தில் செத்திலாப் பத்து என்ற பதிகத்தில் சாதல், செத்திலேன் என்றும், நாலடியாரில், ''செத்தாரைச் சாவார் சுமந்து'' என்றும் கூறியிருப்பதால், செத்தாரென்ற சொல் மேம்பாடு பெற்றுநிற்கின்றது

என்று ஒவ்வொரு அமங்கலச் சொல்லுக்கும் இலக்கியச் சான்றுகாட்டி, அச்சொற்களை மங்கலச் சொற்களாகவே கொள்ளலாம் என்று கூறியிருப்பது புதுமையான விளக்கமாகும்.

நன்னூல் இலக்கண விதிகளுக்கெல்லாம் எளிமையான நடைமுறை எடுத்துக்காட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பல்வேறு சிறப்பான பண்புகள் கொண்டதாக செந்தமிழ் இலக்கணம் அமைந்துள்ளது. இந்நூல் பொன். இராமநாதன் அவர்களுக்கு மேலும் புகழை வழங்குகின்றது.

# பெருமாட்டி லீலாவதி இராமநாதன் அம்மையார்

**திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்**
முன்னாள் அதிபர்,
இராமநாதன் கல்லூரி.

சேர். பொன். இராமநாதன் அவர்களின் பெருமைக்கும் புகழுக்கும் உறுதுணையாக விளங்கியவர் அவருடைய துணைவியார் பெருமாட்டி லீலாவதி இராமநாதன் அவர்களாவார். அம்மையார் குடும்பத்தவர்கள் இங்கிலாந்திலே யோக்சயர் என்ற இடத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அவுஸ்திரேலியா சென்று அங்கு வாழ்ந்து பொருட்செல்வம் கல்விச்செல்வம் என்பவற்றை நிரம்பப் பெற்றனர். உலகியல் போகங்கள் எல்லாவற்றையும் அனுபவிக்கத்தக்க வசதி இருந்தும் அவர் எளிமையான வாழ்க்கையையும் உயர்ந்த சமய வாழ்வையும் பெரிதும் விரும்பினார். நிலையில்லாத செல்வத்தை அனுபவிப்பதிலும் பார்க்க நிலையான செல்வத்துள் எல்லாம் தலை சிறந்த செல்வமான அருட் செல்வதைப் பெற விரும்பினார். ஒப்பீட்டு முறையில் சமய ஆராய்ச்சி செய்ய விரும்பிய அம்மையார் தனக்கு ஏற்ற ஒரு குருவைத் தேடிய பொழுது சைவ சமயத்தில் அதிக ஈடுபாடும் சைவ சித்தாந்தத்தில் ஆழமான அறிவும் சமய வாழ்வும் உடைய தன்னிகரில்லாத தலைவனாகியசேர்.பொன்.இராமநாதனை சந்தித்தார். அம்மையார் சேர். பொன். இராமநாதனின் சிஷ்யை ஆகி குரு சிஷ்ய முறையிலே சைவசமயத்தை கற்க ஆரம்பித்தார். சைவ சமய தத்துவம், சமய இலக்கியங்கள், சைவசமயக் கோட்பாடுகள் என்பன அவரைக் கவர்ந்தன. மேலை நாட்டவரின் ஆடம்பரமான நாகரீக வாழ்வை வெறுத்து எளிய முறையிலேயே தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். குருவினுடைய சமய வாழ்வு, ஆலய வழிபாட்டுமுறை, திருமுறைகளிலே உள்ள ஈடுபாடு, அந்தணரைப் பேணும் பண்பு, என்பன அம்மையாரிடம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி அவரைத் தமிழ்ப் பெண்மணி போல வாழ வகுத்தது. அம்மையாருடைய அறிவு ஆற்றல், நற்பண்புகள் காரணமாக அவரைத் தமது அந்தரங்கச் செயலாளராக நியமித்தார். செயலாளர் என்ற முறையில் நன்கு திட்டமிட்டுச் செயலாற்றிய காரணத்தினால் சேர். பொன். இராமநான் எல்லாக் கருமங்களிலும் பெருவெற்றி கண்டார்.

சேர்.பொன். இராமநாதன் அமெரிக்கா சென்று பல இடங்களிற் சைவசித்தாந்தம் பற்றிச் சொற்பொழிவுகளாற்றி எல்லோரதும் பாராட்டுக்களையும் பெற்றார். அவருடைய சொற்பொழிவாற் கவரப்பட்ட அமெரிக்க மக்கள் அவரை மேலும் பல நாட்கள் அங்கு தங்கிச் சொற்பொழிவு ஆற்றும் வண்ணம் வேண்டிக் கொண்டார்கள். ஆனால் சில முக்கிய கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு அவர் நாடு திரும்பவேண்டி ஏற்பட்டது. இதன்பின் தனது அமெரிக்கப் பிரயாணத்துக்கும் அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கும் உறுதுணையாக விளங்கியவர் அவரது அந்தரங்கச் செயலாளராகிய செல்வி R. L. ஹரிசன் ஆவார். செல்வி ஹரிசனுடைய கடமை உணர்வு, செயலாற்றும் திறமை, நற்பண்புகள் இராமநாத வள்ளலைக் கவர்ந்தன. ஒத்தபண்பும், கருத்தும், கொள்கையும் உடைய இவர்கள் மணவாழ்வில் ஒன்றுபட்டனர். செல்வி ஹரிசன் சேர். பொன். இராமநாதனுடைய நாமத்தைக் கேட்டு, அவருடைய வண்ணத்தைக் கேட்டு, அவருடைய ஊர் கேட்டு, அவருக்கே பிச்சி ஆகித் தன்னை மறந்து தன் நாமம் கெட்டு

தலைவனைச் சேர்ந்தார். இவர்களது திருமணத்துக்குப் பின் அம்மையார் வாழ்க்கையிலே பெரிய மாற்றம் ஏற்பட்டது. நடை உடை பாவனையால் ஒரு தமிழ் பெண்போலவும் சைவ அபிமானிபோலவும் விளங்கினார் என்பதில் நாம் பெருமை அடைய வேண்டும்.

**"ற்காத்துத் தற்கொண்டாற் பேணித்**
**தகைசான்ற சொற் காத்துச் சோர்**
**விலாள் பெண் "**

என்ற குறளுக்கேற்ப வாழ்ந்த பெருமைக்குரியவர். இருவரும் அறவழி நின்று பிற நலன் பேணி அந்தணரை ஓம்பி பரமேஸ்வரன் கொடுத்த செல்வத்தை நாட்டுப் பணிக்கு அர்ப்பணித்து தமிழையும் சமயத்தையும் பேணிப்பாதுகாத்து பல்துறைப் பணியாற்றினர். சேர். பொன். இராமநாதனால் நிறுவப்பட்ட இரு கல்வி நிறுவனங்களையும் அவருடைய சொத்துக்களையும் நிர்வகிப்பதில் பெரும் பங்காற்றினார்.

சீமாட்டி இராமநாதன் அம்மையார் ஓர் சிறந்த நிர்வாகியாகவும் விளங்கினார். தனது தலைவரின் மறைவுக்குப் பின் நிர்வாகப்பொறுப்பு முழுவதையும் தானே ஏற்றுச் செயல்பட்டார். தனது தலைவனின் குறிக்கோளில் நின்று சிறிதும் விலகாது அவருடைய இலட்சியங்களைக் கடைப்பிடித்துக் கடமையாற்றினார். தனக்கு கீழ் கடமையாற்றுபவர்களோடு அன்பாகப்பேசும் அதேவேளை மிகக்கண்டிப்பாகவும் இருந்தார். மேலும் அங்கு கடமையாற்றும் பணியாளர்களுக்கு உணவும் உடையும் வழங்கி நோயுற்ற காலத்தில் மருத்துவ வசதியையும் ஏற்படுத்தி மேலதிக பணமும் கொடுத்து அவர்களது அன்புக்குப் பாத்திரமானார். நிதி சம்பந்தமான விடயங்களில் விடயங்களை நன்றாக ஆராய்ந்து சிக்கனங்களைக் கடைப்பிடித்து பணவிரயம் ஏற்படாதவாறு கடமையாற்றினார்.

இராமாயணத்தைக் கேட்டு அதனாற் கவரப்பட்ட அம்மையார் அதனை ஆங்கிலத்தில் எழுதி சிறந்த எழுத்தாளார் என்பதையும் நிரூபித்துக் கொண்டார். அமெரிக்காவுக்குச் சென்றபொழுது அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்து "கீழ்நாட்டு மாணவர்களுக்கான மேலை நாட்டுக் காட்சிகள்" என்னும் நூலை அம்மையார் எழுதி வெளியிட்டார்.

இரு பெரும் கல்வி நிறுவனங்களை நிறுவிய எமது கல்லூரித்தாபகர் இராமநாதன் வளாகத்துடன் இணை 'பங்களா' எனப்படும் பெரிய இல்லத்தை தனது வதிவிடமாக்கினார். அங்கிருந்து கல்லூரி மாணவிகளுடைய விடுதி வாழ்க்கை, ஆலய வழிபாடு, சிவாலயத் தொண்டு, பண்ணிசை என்பவற்றை இருவருமாகக் கண்காணித்து வந்தனர். மேலும் சங்கீதம், நடனம், பண்ணிசை பிரத்தியேகமாகப் புகட்டப்பட்டன. அக்காலத்தில் சைவப்பெண்களுக்கு ஏற்ற கல்விக்கூடங்கள்போதியளவு இல்லை. எனவே சைவப் பெண்கள் யாழ்பாணத்தின் பல பாகங்களிலிருந்து இங்கு வந்து கற்றனர். இங்கு கற்பது ஒரு கிடைத்தற்கரிய பேறாகக்கருதப்பட்டது. இராமநாத வள்ளலுக்குப் பின் பெருமாட்டி லீலாவதி அம்மையார் கல்லூரிப் பொறுப்பைத் தாமே ஏற்று தனது தலைவனின் குறிக்கோளுக்கு ஏற்ப நிர்வகித்தார். இங்கு கற்று, பின் உயர்கல்வி பெற்ற இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவிகள் தமிழ்ப் பண்பாட்டையும், சமய கலாசாரத்தையும் நம் நாட்டின் பல பாகங்களிலும் தற்போது கடல் கடந்த அந்நிய நாடுகளிலும் வளர்த்து வருகிறார்கள் என்பதில் நாம் பெருமைப் படவேண்டும்

இராமநாதன் கல்லூரி அதிபராகவும், சைவ மங்கையர் சபைத் தலைவியாகவும் விளங்கிசமயவிழாக்கள், சொற்பொழிவுகள், கலந்துரையாடல்கள் என்பவற்றை நடத்தி பெண்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார் இவருடைய பன்முகப் படுத்தப்பட்ட பணியைப் பாராட்டி இலங்கைப்பல்கலைக்கழகம் 1942 ம் ஆண்டு அம்மையாருக்குக் கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

அவுஸ்திரேலிய மண்ணிற் தோன்றி ஈழமண்ணிற் தமது சேவைகளைத் திறம்பட ஆற்றிய பின் 1960 ஆம் ஆண்டு தைத்திங்களிற் சிவகாமசுந்தரி சமேத நடராஜப்பெருமான் திருவடி நீழலை அடைந்தார். செயற்கரியன செய்த இப்பெருமாட்டி காட்டிய நன்னெறிகளைக் கடைப் பிடித்தொழுகும் மங்கையர் வாழுங் காலம் வரை அவரது புகழ் பொன்றாது நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற உண்மையை நிரூபிக்க முடியாது; நிரூபிக்கத் தேவையுமில்லை. கடவுள் ஒருவர் உண்டு. அவர் இருக்கிறார் என்பதை உணராவிட்டால் அதனால் நமக்குத்தான் கேடு. கடவுளைப் பற்றிய உணர்ச்சியே இல்லாதிருப்பது, பிணிவாய்ப்பட்ட நிலை போன்றது. விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இந்தப் பிணியிலிருந்து ஒரு நாள் விடுபடுவோம் என்பது நிச்சயம்.

மகாத்மா

# ஆசிரியர் குழாம்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி ஆ. சிவஞானசுந்தரம்<br>அதிபர் | B. A. (Hons), Dip - in - Education,<br>S. L. P. S. - I |
| 2. | திருமதி சோ. கைலாசநாதன்<br>பிரதி அதிபர் | B. Sc Dip - in - Education |
| 3. | திரு. வெ. ஏகாம்பரநாதன்<br>பகுதித் தலைவர் | B. Sc. |
| 4. | திருமதி சு. விவேகானந்தன்<br>பகுதித் தலைவர் | B. A. |
| 5. | திருமதி ப. பத்மநாதன்<br>பகுதித் தலைவூர் | விஷேட பயிற்சி வர்த்தகம் |
| 6. | திருமதி கு. அப்புத்துரை<br>பகுதித் தலைவர் | பொதுப் பயிற்சி தரம் 1 |
| 7. | திருமதி ப. தாமோதரம்பிள்ளை | B. Sc. (H. Sc.) |
| 8. | திருமதி சி. துரைசிங்கம் | பொதுப் பயிற்சி தரம் 1 |
| 9. | செல்வி ம. வேலுப்பிள்ளை | ,, ,, ,, |
| 10. | செல்வி ல. நாகலிங்கம் | விஷேட பயிற்சி - ஆங்கிலம் ; டிப்ளோமா<br>விவசாயம் |
| 11. | திருமதி க. மகாலிங்கம் | விஷேட பயிற்சி மனையியல், |
| 12. | திருமதி நே. சிறீகாந்தன் | B. A |
| 13. | திருமதி ப. அருளானந்தம் | B. Sc. Hons (Agri) |
| 14. | திருமதி வை. கணேசபிள்ளை | விஷேட பயிற்சி (சமயம்) - பண்டிதை |
| 15. | திருமதி உ. நடராஜா | B. A. |
| 16. | செல்வி மா. வேலாயுதர் | சங்கீதபூஷணம் ; விஷேட பயிற்சி (இசை) |
| 17. | திரு. வ. பாலேந்திரா | விஷேட பயிற்சி - கணிதம் |
| 18. | திருமதி க. சின்னத்துரை | விஷேட பயிற்சி - சமூகக்கல்வி |
| 19. | திருமதி ப. தியாகலிங்கம் | விஷேட பயிற்சி - தமிழ் |
| 20. | திருமதி ஜீ. கணேசலிங்கம் | B. A., Dip. - in - Education |
| 21. | செல்வி க. தம்பிஐயா | விஷேட பயிற்சி - விவசாயம் |
| 22. | திருமதி ச. சிவநாதன் | B. A. (Hons) Dip - in - Education |
| 23. | திருமதி கு. விஜயரகுநாதன் | B. A. (Special) Dip - in - Education |
| 24. | திருமதி வி. நரேந்திரா | டிப்ளோமா - சங்கீதம் |
| 25. | திருமதி சு. யோகலிங்கம் | B. Sc. Dip - in - Education |
| 26. | செல்வி செ. செல்வராஜா | B. Sc. |

| | | |
|---|---|---|
| 27. | செல்வி ர. கதிரிப்பிள்ளை | விஷேட பயிற்சி – கணிதம் |
| 28. | திருமதி ந. சிவராஜன் | விஷேட பயிற்சி - நடனம் |
| 29. | திருமதி ப. கேசவன் | விஷேட பயிற்சி - ஆங்கிலம் |
| 30. | திருமதி மீ. சிறீதரன் | விஷேட பயிற்சி - விஞ்ஞானம் |
| 31. | திருமதி தே. மோகனசந்திரன் | பொதுப் பயிற்சி |
| 32. | செல்வி சி. சிவசம்பு | B. A. |
| 33. | செல்வி மே. நாகநாதன் | பயிலுநர் – சித்திரம் |
| 34. | செல்வி கி. கந்தசாமி | ,, – உடற்கல்வி |
| 35. | செல்வி வா. மாணிக்கவாசகர் | ,, – விஞ்ஞானம் |
| 36. | திருமதி த. ஆனந்தராஜன் | தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் |
| 37. | திரு. ம. கோபாலகிருஷ்ணன் | B. Sc |
| 38. | திரு. கா. சாந்திநாதன் | B. BA. (Hons) |
| 39. | திருமதி இ. ரா. ஜெபநாயகம் | விஷேட பயிற்சி – ஆங்கிலம் |
| 40. | செல்வி வி. கந்தையா | விஷேட பயிற்சி – சமூகக்கல்வி<br>B. A., Dip - in - Education |
| 41. | செல்வி கு. துளசிநாதன் | பொதுப் பயிற்சி |
| 42. | செல்வி வ. கந்தசாமி | B. A. |
| 43. | செல்வி சி. பஞ்சாட்சரம் | B. A. (Hons) |
| 44. | செல்வி எ. ஜோ. செல்வம் (3 நாட்கள்) | தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் |
| 45. | திரு. தி. அ. பூரணச்சந்திரன் | B. Sc, Dip - in - Education (பகுதிநேர ஆங்கில ஆசிரியர்) |
| | செல்வி ப. சின்னத்தம்பி | விஷேட பயிற்சி – ஆங்கிலம்<br>தொண்டர் ஆசிரியர் |
| | செல்வி கௌ. விநாயகமூர்த்தி | G. C. E. (A/L) தொண்டர் ஆசிரியர் |
| | செல்வி ஆ. சுப்பையா | G. C E. (A/L) ,, ,, |
| | செல்வி ஜெ. சாமுவேல் | G. C. E. (A/L) ,, ,, |
| | செல்வி ர. குலசேகரம் | G. C. E. (A/L) ,, ,, |
| | செல்வி நி. வேலுப்பிள்ளை | G. C. E. (A/L) கல்வி வளர்ச்சிக் கழகம் |
| | திருமதி வி. முருகானந்தன் | G. C. E. (A/L) கல்வி வளர்ச்சிக் கழகம் |

# சேர். பொன். இராமநாதன் அவர்களின் உருவச்சிலைக்கும், சிறப்புமலர் வெளியீட்டுக்கும் நிதியுதவி வழங்கியோர்.

| | | |
|---|---|---|
| 1. | செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி துர்க்காபுரம் மகளிர் இல்லம். | 10,000-00 |
| 2. | திரு. சு. பொ. நடராசா அண்ணாகோப்பி இணுவில். | 10,000-00 |
| 3 | திரு. மா. கிரிதரன் J. P. விமாகி, யாழ்ப்பாணம். | 10,000-00 |
| 4. | திரு. து. சிவராசா இணுவில் தெற்கு, சுன்னாகம். | 10,000-00 |
| 5. | திரு. க. சோமசேகரம் மகாராணிபுடைவைக்கடை, யாழ்ப்பாணம். | 10,000-00 |
| 6. | திரு. இரா. சுந்தரலிங்கம் இணுவில், சுன்னாகம். | 6001-00 |
| 7. | திரு. சுவாமி சித்ரூபானந்தா ஸ்ரீ இராமகிருஷ்ண ஆச்சிரமம் பருத்தித்துறை. | 5000-00 |
| 8. | திரு. த. கந்தசாமி பசன்ஹவுஸ் யாழ்ப்பாணம். | 5000-00 |
| 9. | திரு. க. பாலசுப்பிரமணியம் வைத்தியர் இணுவில் தெற்கு, சுன்னாகம். | 5000-00 |
| 10. | திரு. திருமதி S. சதாசிவம் 26/1 அல்பிரட் இடம் கொழும்பு-3 | 5000-00 |
| 11. | பூபாலசிங்கம் புத்தகசாலை மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். | 2500-00 |
| 12. | திரு. மு. கணேசு கந்தசாமிகோவிலடி இணுவில், சுன்னாகம். | 2500-00 |
| 13. | திரு. சித்தி காமன்ஸ் சிவமதி இணுவில் | 3000-00 |
| 14. | திரு. அ. செல்வநாயகம் இணுவில். | 2500-00 |
| 15 | திரு. யோகமணி ஆடையகம் யாழ்ப்பாணம். | 1500-00 |
| 16. | திரு. வ. இராசதுரை வறுத்தலைவிளான், தெல்லிப்பழை. | 1005-00 |
| 17. | திரு. அ. நாகராசா உடுவில் வடக்கு, சுன்னாகம். | 1005-00 |
| 18. | திரு. அ. நல்லதம்பி மானிப்பாய் வீதி, உரும்பராய். | 1005-00 |
| 19. | திரு. செ. இலகுநாதன் காங்கேசன்துறை வீதி, இணுவில். | 1005-00 |
| 20. | திரு. த. செல்வராசா மின்நிலைய வீதி, சுன்னாகம். | 1005-00 |
| 21. | திரு. சி. தம்பித்துரை மின்நிலையம் சுன்னாகம். | 1005-00 |
| 22. | திருமதி தி. தருமலிங்கம் உடுவில்கிழக்கு, சுன்னாகம். | 1005-00 |
| 23. | திரு. செ. சோதிப்பெருமாள் இணுவில். | 1001-00 |
| 24. | திரு. க. பாலசுப்பிரமணியம் இணுவில். | 1001-00 |
| 25. | திரு. து. சின்னராசா ,, | 1000-00 |
| 26. | திருமதி க. உலகேஸ்வரன் ,, | 1000-00 |
| 27. | திரு. க. பரமேஸ்வரன் நல்லூர். | 1000-00 |
| 28. | திருமதி வ. கதிர்காமநாதன் நல்லூர். | 1000-00 |
| 29. | திரு. தேவராசா | 500-00 |
| 30. | செல்வி ய. நடராசா ஆசிரியர் இந்துமகளிர் கல்லூரி. | 500-00 |
| 31. | திரு. இ. ஜெயராஜ் கம்பன் கழகம். | 500-00 |
| 32. | திரு. ஆறு. திருமுருகன் பாலாவி இணுவில், மருதனார்மடம். | 1000-00 |
| 33. | திரு. கே. வேலும்மயிலும் கந்தசாமிகோவிலடி, இணுவில். | 1000-00 |

| | | |
|---|---|---|
| 34. | திரு. எஸ். பத்மநாதன் 42 மென்போன் அவனியூ கொழும்பு. | 1000-00 |
| 35. | திருமதி ய. ஜெயலட்சுமி இணுவில், சுன்னாகம். | 1000-00 |
| 36. | புதிய சண்முகானந்தா, ஆடையகம் யாழ்ப்பாணம். | 1000-00 |
| 37. | திருமதி M. S. வைடூரியம் இணுவில். | 1000-00 |
| 38. | திருமதி இராஜேஸ்வரி பரமானந்தம், காங்கேசன்துறை. | 500-00 |
| 39. | திருமதி மகேஸ்வரி நாகரத்தினம் தெல்லிப்பழை. | 500-00 |
| 40. | திரு. க. சின்னராசா ஏழாலைகிழக்கு, ஏழாலை. | 500-00 |
| 41. | திருமதி ஞானக்குமாரி சிவனேசன் முதன்மை ஆசிரியர் உடுவில். | 250-00 |
| 42. | திருமதி சறோயினி செல்வநாயகம் இணுவில்தெற்கு. | 200-00 |
| 43. | உடுவில்பிரதேச கல்விக்கோட்டம் உடுவில். | 375-00 |
| 44. | திருமதி வாகீஸ்வரி சர்மா நல்லூர். | 200-00 |
| 45. | விக்கினேஸ் ரெக்ஸ் யாழ்ப்பாணம். | 200-00 |
| 46. | திருமதி N. N. இராஜா ஆசிரியை இந்துமகளிர் கல்லூரி. | 300-00 |

## ஆசிரியர் குழாம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | திருமதி ஆ. சிவஞானசுந்தரம் அதிபர், இராமநாதன் கல்லூரி | | | | 2,000-00 |
| 2. | திருமதி சோ. கைலாசநாதன் பிரதி அதிபர் இராமநாதன் கல்லூரி | | | | 2,000-00 |
| 3. | செல்வி லலிதா நாகலிங்கம் ஆசிரியை இராமநாதன்கல்லூரி | | | | 2,000-00 |
| 4. | திரு. கா. சாந்திநாதன் | | ஆசிரியர் | ,, | 1,000-00 |
| 5. | திருமதி ப. தாமோதரம்பிள்ளை | | ஆசிரியை | ,, | 500-00 |
| 6. | ,, | நே. சிறிக்காந்தன் | ,, | ,, | 500-00 |
| 7. | ,, | உ. நடராஜா | ,, | ,, | 500-00 |
| 8. | ,, | ப. அருளானந்தம் | ,, | ,, | 500-00 |
| 9. | ,, | கு. விஜயரகுநாதன் | ,, | ,, | 500-00 |
| 10. | ,, | ஜீ. கணேசலிங்கம் | ,, | ,, | 500-00 |
| 11. | ,, | சி. துரைசிங்கம் | ,, | ,, | 500-00 |
| 12. | செல்வி | ம. வேலுப்பிள்ளை | ,, | ,, | 500-00 |
| 13. | ,, | கு. அப்புத்துரை | ,, | ,, | 500-00 |
| 14. | ,, | க. சின்னத்துரை | ,, | ,, | 500-00 |
| 15. | திரு. | வ. பாலேந்திரா | ,, | ,, | 500-00 |
| 16. | திருமதி | வை. கணேசபிள்ளை | ,, | ,, | 500-00 |
| 17. | செல்வி | செ. செல்வராஜா | ,, | ,, | 500-00 |
| 18. | ,, | சி. சிவசம்பு | ,, | ,, | 500-00 |
| 19. | ,, | மே. நாகநாதன் | ,, | ,, | 500-00 |
| 20. | ,, | வ. கந்தசாமி | ,, | ,, | 500-00 |
| 21. | ,, | சி. பஞ்சாட்சரம் | ,, | ,, | 500-00 |
| 22. | திருமதி | ப. தியாகலிங்கம் | ,, | ,, | 500-00 |
| 23. | ,, | ந. சிவராஜன் | ,, | ,, | 500-00 |
| 24. | ,, | ப. கேசவன் | ,, | ,, | 500-00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 25. | திருமதி வி. நரேந்திரா | ஆசிரியை | இராமநாதன் கல்லூரி | 500-00 |
| 26. | ,, மீ. சிறிதரன் | ,, | ,, | 500-00 |
| 27. | செல்வி மா. வேலாயுதர் | ,, | ,, | 500-00 |
| 28. | திருமதி க. மகாலிங்கம் | ,, | ,, | 400-00 |
| 29. | ,, தே. மோகனசந்திரன் | ,, | ,, | 300-00 |
| 30. | செல்வி ர. கதிரிப்பிள்ளை | ,, | ,, | 300-00 |
| 31. | ,, கு. துளசிநாதன் | ,, | ,, | 300-00 |
| 32. | ,, வி. கந்தையா | ,, | ,, | 300-00 |
| 33. | ,, வா. மாணிக்கவாசகர் | ,, | ,, | 300-00 |
| 34. | திருமதி இ. ரா. ஜெபநாயகம் | ,, | ,, | 300-00 |
| 35. | ,, த. ஆனந்தராஜன் | ,, | ,, | 300-00 |
| 36. | ,, சு. யோகலிங்கம் | ,, | ,, | 300-00 |
| 37. | திரு. ம. கோபாலகிருஸ்ணன் | ஆசிரியர் | ,, | 200-00 |
| 38. | செல்வி ஏ. ஜோ. செல்வம் | ஆசிரியை | ,, | 100-00 |
| 39. | ,, கி. கந்தசாமி | | ,, | 100-00 |

## நுண்கலைப் பீடம் யாழ். பல்கலைக்கழகம்

| | | |
|---|---|---|
| 1. | திரு. சா. ஜெயராசா | 100-00 |
| 2. | பிரம்மஸ்ரீ அ. நா. சோமஸ்கந்தசர்மா | 100-00 |
| 3. | திரு. ப. உமாசங்கர் | 100-00 |
| 4. | ,, S. பத்மலிங்கம் | 100-00 |
| 5. | ,, ஹ. சேதுபதி | 100-00 |
| 6. | ,, கி. இரவீந்திரா | 100-00 |
| 7. | ,, சா. சுப்பிரமணியம் | 100-00 |
| 8. | ,, பா. நடராசா | 100-00 |

சகல கலைகளும் மிளிர

சதா உழைத்த உத்தமர்

உணர்வு



நிலைபெற

**வாழ்த்தும்**

## சாந்தி சைவ உணவகம்

காங்கேசன் துறை நெடுஞ்சாலை, சுன்னாகம்.

---

பெருமானார்

பெருவிழா

சிறக்க

**வாழ்த்துகிறோம்**

*

## துர்க்கா பொத்தகச் சோலை

புகழ் பெற்ற பொத்தக

விற்பனையாளர்கள்

பஸ்நிலையம் முன்பாக,

சுன்னாகம்.

---

வள்ளலார்

வளமான

சிந்தை

நிலைக்க

**வாழ்த்தும்**

## வரன் நாதன் களஞ்சியம்

பலசரக்கு மொத்த விற்பனை

நிலையம்

காங்கேசன்துறை நெடுஞ்சாலை,

சுன்னாகம்

* எமது வாழ்த்துக்கள் *

மிதிவண்டி, மிதிவண்டி உதிரிப்பாக

விற்பனை முன்னோடிகள்

# இ. சுப்பிரமணியம்

மிதிவண்டி விற்பனை நிலையம்

8, காங்கேசன்துறை நெடுஞ்சாலை, சுன்னாகம்.

உன்னதப் பணி புரிந்த
உத்தமன் சிலை திறப்பு நிகழ்வை
வாழ்த்துகிறோம்

இயந்திர உதிரிப்பாக விற்பனையாளர்

**நியூ லிங்கம்**

**ஸ்ரோர்ஸ்**

பிரதான வீதி, சுன்னாகம்


பெண்கள் கல்விக்கு வழிகாட்டிய
பெருந்தகையின் பெரும் பணியை
நினைவு கூர்வீர்கள்

**சுவர்ணா**

**பேக்கவுஸ்**

(பெரியமதவடி

காங்கேசன்துறை நெடுஞ்சாலை, சுன்னாகம்.



நிலையான பணி செய்தோன்

நின் நிமிர்ந்த

சிலை நிலைநின்று




நின் சிந்தைகள் நிலத்திலோங்க

நிதமும்

வாழ்த்துகிறோம்

# நியூ கணேஷா

## ஜுவலர்ஸ்



267, காலி வீதி,
வெள்ளவத்தை
கொழும்பு-6

# நன்றிக்குரியோர்

★ உவமையில்லா உயர் பணிகள் நிறைவு பெற ஆற்றிய சேர். பொன். இராமநாதப் பெருவள்ளலின் திருவுருவச் சிலையைக் கலலூரி முன்றலில் நிறுவவேண்டுமென்ற நல்லெண்ணத்தை வெளிப்படுத்திய அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் நலன் விரும்பிகள்.

★ இப்பணியை மேற்கொண்டு அயரா உழைப்பை நல்கிய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.

★ சிறந்த சிந்தனையோடு செயலாற்றிய சிலை அமைப்புக்குழுவினர்.

★ திருவுருவச்சிலையை அழகுற வடிவமைத்துத் தந்த சிற்பவல்லுனர் திரு. வை. சிவசுப்பிரமணியம் ( றமணி ) அவர்கள்.

★ சுபமுகூர்த்தத்தில் அடிக்கல்நாட்டி துரிதகதியில் நிறைவேற ஆசி வழங்கிய முன்னைநாள் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்கள்.

★ சைவமும் தமிழும் தழைக்க வைக்கும் பணியில் முன்னின்று உழைக்கும் சிவத்தமிழ்ச் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி J. P. அவர்கள் ( இன்று இச்சிலையைத் திறந்துவைப்பவர் )

★ பொருளுதவி புரிந்து இப்பணி நிறைவுறுவதற்கு உதவிய தயாள குணம் படைத்தோர்.

★ நல்ல கருமங்களை வரவேற்பதில் நாட்டமுள்ள பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள்.

★ சிறப்புமலரை வெளியிடு செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட மலர்க் குழுவினர்கள்.

★ மலருக்கு விளம்பரம் நல்கி ஆதரவு வழங்கியோர்.

★ கட்டுரைகள், ஆசிச்செய்திகள் தந்து மலரை மகிமைப்படுத்தியோர்.

★ குறுகிய காலத்தில் இம்மலரை அச்சேற்றி அன்பர்கள் கையில் தவழ விட்ட சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினர்.

★ மலருக்குரிய அட்டைப்படத்தை அழகுற அமைத்துத்தந்த திரு. ஆ. ஞானசேகரம் (ஞானம்) அவர்கள்.

★ மலரை அலங்கரிக்கும் பிரதிமைப் படங்களை சிறந்த முறையில் எடுத்துதவிய சித்திராலயா புகைப்பட நிறுவனத்தினர்

★ செய்தித்தாள்கள் மூலமும், வானொலி மூலமும் சிலை எடுக்கும் நற் பணிகளுக்கு ஊக்கமளித்தவர்கள்.

★ சிலை திறபபு விழாவில் பங்குபற்றிச் சிறப்பித்த அந்தணர்கள், அறிஞர்கள் கலைஞர்கள் கல்வி அதிகாரிகள், பெற்றோர்கள் பிளளைகள்.

ஆகியோர் அனைவருககும் எமது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா / இராமநாதன் கல்லூரி
சுன்னாகம்.
30 - 11 - 1994

**வ. இராசதுரை**
**அ. நாகராஜா**
இணைச் செயலாளர்கள்

